# அரசு ஊழியர்

டிசம்பர் 2019

மலர் : 40 இதழ் : 12

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,
இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*


*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடா ஒரு கோப்பை சூப்

## உள்ளத்தின் உண்மையொளி!

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல்
கலைப்பெருக்கும் கனிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

– மகாகவி பாரதியார்



தலைவர் மடல்

# சாமானியரின் மீது நடத்தப்படும் சரமாரித் தாக்குதல்!

**மோ**டி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவில் நுகர்வோர் செலவினம் குறைந்திருக்கிறது என்ற அதிர்ச்சித் தகவலை பிசினஸ் ஸ்டாண்டர்ட் பத்திரிகை வெளியிட்டுள்ளது. நுகர்வு பொருட்கள் விலையேற்றம், பணமதிப்பிழப்பு நடவடிக்கை, தெளிவில்லாத ஜிஎஸ்டி வரிவிதிப்பு போன்றவற்றின் காரணமாக சிறுகுறுதொழில்கள் முடங்கிப்போய் மக்களின் வாங்கும் சக்தி குறைந்து நடுத்தர மற்றும் ஏழை இந்தியர்கள் தங்கள் உணவை குறைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கிராமப்புற நுகர்வு அதிவேகமாக சரிந்திருப்பதாக 'நீல்சன்' நிறுவனமும் ஆய்வு செய்து தெரிவித்துள்ளது.

இந்தியாவில் உணவுப் பொருட்கள் விலை உயர்வினால் கடந்த அக்டோபர் மாத சில்லரை பணவீக்கம் 4.62 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இது ரிசர்வ் வங்கி இலக்கு நிர்ணயித்த 4 சதவிகிதத்தை விட அதிகம் என்பதுடன் கடந்த 16 மாதங்களில் இல்லாத அளவிற்கான மிகப் பெரிய சில்லரைப் பணவீக்க விகிதம் என்பது குறிப்பிடத்தக்கது. காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள், முட்டை, இறைச்சி போன்றவற்றின் விலை செப்டம்பரில் இருந்ததை விட அக்டோபரிலும் அதைவிட நவம்பர் மாதத்திலும் உயர்ந்துள்ளன. தற்போது வெங்காயத்தின் விலையைச் சொன்னாலே கண்ணீர் வரும் அளவுக்கு ஒரு கிலோ வெங்காயம் ரூ.200/-ஐ எட்டியுள்ளது. மத்திய அமைச்சரிடம் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை குறிப்பாக வெங்காயத்தின் விஸ்வரூப விலையேற்றத்தை குறைக்க என்ன நடவடிக்கை வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டால், அப்படி ஒரு திட்டம் எதுவும் எங்களிடம் இல்லை என்கிறார்.

பணமதிப்பு நீக்கம் என்பது இதுவரையிலும் இந்தியா காணாத ஒரு பயங்கரப் பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது. 2016 நவம்பர் மாதத்தில் பணமதிப்பு நீக்கத்தை அதிரடியாக அமலுக்கு கொண்டு வந்த பிரதமர் மோடி, நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான காரணங்களை முன்வைத்து, அந்தக் காரணங்கள் நிறைவேறவில்லை என்றால் 50

நாட்களுக்குப் பிறகு இந்திய மக்கள் தன்னை தண்டிக்கலாம் என்று வாக்குறுதி அளித்தார். ஆனால் பணமதிப்பிழப்பு நடவடிக்கை தொடங்கப்பட்ட அடுத்த நிமிடத்திலிருந்து இன்றுவரை அந்த தண்டயை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் ஏழை எளிய நடுத்தர வர்க்க மக்கள்தான். 2017-18 நிலவரப்படி இந்தியாவில் ஏழை எளிய நடுத்தர வர்க்க மக்கள் அன்றாடம் பால் வாங்குவதை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆண்டில் மட்டும் பால் வியாபாரத்தில் ரூ.60 ஆயிரம் கோடி பணப்புழக்கம் நின்றுபோயுள்ளது. இதன் தொடர் விளைவுகள் ஒட்டுமொத்த பால் உற்பத்தியிலும் அது சார்ந்த வேலை வாய்ப்புகளிலும் மட்டுமல்ல இந்திய ஏழை எளிய நடுத்தர வர்க்க குழந்தைகளின் ஆரோக்கியத் திலும், எதிர்காலத்திலும், பாதிப்புகளை ஏற்படுத்த வல்லது.

ஒவ்வொரு ஆண்டும் ஒருகோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்போம் என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த பாஜக அரசு அவர்களை இன்று தெருக்கோடியில் தள்ளியுள்ளது. இந்திய வரலாற்றிலேயே முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு கடந்த ஆறு ஆண்டுகளில் 90 லட்சம் வேலை வாய்ப்புகள் பறிக்கப்பட்டு அத்தனை பேரும் வீதிக்கு விரட்டப்பட்டிருக்கிறார்கள். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்காதது ஏன் என்ற பிரச்னை இப்போது பின்னுக்குத் தள்ளப்பட்டு உள்ள வேலையையும் மிகப்பெரிய அளவிற்கு பறித்திருக் கிறார்கள் என்பது இந்திய இளைஞர்களின் எதிர்கால கனவுகளுக்கு மிகப்பெரிய அடியாகும். இதன்மூலம் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வும், வாழ்வாதாரங் களும் கடந்த சில மாதங்களில் சூறையாடப்பட் டுள்ளன.

ஐ.டி.துறையில் காக்னிசாண்ட் நிறுவனம் சில ஆயிரம் ஊழியர்களை வீட்டுக்கு அனுப்ப முடிவு செய்திருப்பதான செயலைத் தொடர்ந்து தற்போது இன்போசிஸ் நிறுவனமும் சுமார் 10 ஆயிரம் சீனியர் நிலையில் இருக்கக்கூடிய ஊழியர்களின் வேலையை பறித்துவிட முடிவு மேற்கொண்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. அடுத்ததாக டிசிஎஸ் நிறுவனத்தி லிருந்து 10000 பேரை வேலை நீக்கம் செய்யப் போவதாகவும் செய்திகள் வரத்தொடங்கியுள்ளன. இதுபோக பிஎஸ்என்எல் நிறுவனத்திலிருந்து ஒரு லட்சம் பேரை விருப்ப ஓய்வில் அனுப்ப இருப்பதாக வும் செய்திகள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. அடுத்து எந்த திசையிலிருந்து எந்த வேலைநீக்க அறிவிப்பு வெளிவரும் என்ற திகிலோடு மக்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட தகவல்கள் இந்தியப் பொருளாதாரம் மிக மிகக் கடுமையான வீழ்ச்சிக்குள் நுழைந் திருக்கிறது என்பதை பிரகடனம் செய்யும் முக்கியத் தகவல்கள் ஆகும். ஆனால் இது குறித்து மோடி அரசு சற்றும் கவலைப்படுவதாக தெரிய வில்லை. இந்த விபரங்களை அலட்சியப்படுத்துவதிலும் தட்டிக் கழிப்பதிலும் மறுப்பதிலும்தான் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். இந்திய பொருளாதார நிலை குறித்து பல்வேறு தரப்பினருடன் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நடத்தும் ஆலோசனைகள் அனைத்தும் கார்ப்பரேட்டுகளுக்கு கருணை அளிப்பதாகவும், ஏழை எளிய நடுத்தர மக்களை நடுத்தெருவில் விட்டுவிடுவ தாகவுமே இதுவரையில் அமைந்துள்ளன. பொதுத் துறைகளை தனியாருக்கு விற்றுவிடுதல் அல்லது மூடிவிடுதல், வங்கிகளை இணைத்து விடுதல், நிர்வாகத்தில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வேலை வாய்ப்பின்மை நிலையை கருத்தில் கொள்ளாமல் இருக்கின்ற வேலைகளை ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையில் செய்து கொள்ளுதல் போன்றவற்றின் மூலம் இந்திய பொருளாதாரத்தை தூக்கி நிறுத்திவிடலாம் என்று கனவு காண்பதிலேயே மத்திய அரசு ஆனந்தம் கண்டுவருகிறது. இதன் விளைவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து ஒருநாள் விபரீதமாகிவிடக்கூடாது என்பதற்காக நாட்டிலுள்ள அனைத்து தொழிற் சங்கங்களும் சில அரசியல்கட்சிகளும் மத்திய சர்க்காருக்கு எச்சரிக்கை செய்ய பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன.

பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்த்திட மத்திய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை கண்டித்தும் பொதுச் சொத்துக் களை பாதுகாத்திட வலியுறுத்தியும் இளைஞர்களின் வேலை வாய்ப்புகளுக்கு உத்தரவாதம், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், விவசாயிகள் நம்பிக்கை யுடன் விவசாயம் செய்வதற்கான திட்டங்கள் போன்றவற்றை வலியுறுத்தி டிசம்பர் மாதம் முழுவதும் கிளர்ச்சிப் போராட்டங்களும் சிறப்பு மாநாடுகளும் நடக்க உள்ளன. இவற்றுக்குப் பின்னர் 2020 ஜனவரி 8ஆம் தேதி அகில இந்திய வேலை நிறுத்தம் மிகப்பெரிய அளவில் நாடு முழுவதிலும் நடத்திட நாட்டிலுள்ள அனைத்து தொழிற் சங்கங்களும் சில அரசியல் கட்சிகளும் அழைப்பு விடுத்துள்ளன. இந்தப் போராட்டங்களுக்கும் பொது வேலை நிறுத்தத்திற்கும் ஆதரவளிப்பதும், பங்கேற்று மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை களுக்கான மாற்றுவழி காண உறுதுணையாய் இருக்க வேண்டியதும் அரசு ஊழியர்களான நம் அனைவரின் தார்மீக கடமையாகும். ❑

# மக்களை நோக்கி - அரசு ஊழியர் சங்கம் மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுக்க...

# நியாயம் கேட்டு நெடும் பயணம்

**அ**ரசு ஊழியர்களின் விடிவெள்ளியாய் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 1984ஆம் ஆண்டு மே 6ஆம் நாள் மதுரையில் துவங்கப் பட்டது. அன்றைய காலகட்டத்தில் தமிழக மக்களின் பேராதரவுடன் ஆட்சிப் பொறுப்பில் இருந்து எம்ஜிஆர் ஆட்சியில் அரசு ஊழியர்கள் என்றாலே திமுக சார்புடையவர்கள் தான் என்ற தவறான கருத்து பரவலாக இருந்தது. ஆகவே அன்றைய ஆட்சிக் காலத்தில் அரசு ஊழியர் அமைப்புகள் போராடுவதற்கே தயக்கம் காட்டின. அப்போதுதான் இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே மிகக்குறைந்த ஊதியம் பெற்று வந்த தமிழக அரசு ஊழியர்களின் உள்ளக் குமுறலை உணர்ந்து போர்க்குணமிக்க ஊழியர் நலன் சார்ந்த உழைப்பாளி மக்களின் உரிமை காக்கும் போராட்டங்களில் அரசு ஊழியர்களும் பங்கு பெறுவது அவசியமாகும் என்ற புரிதலோடும் குறிக்கோளோடும் உருவானது தான் அரசு ஊழியர் சங்கம்.

தமிழக அரசு ஊழியர்களின் அமைப்புகளி லேயே ஒரு அதிக அளவில் (1,31,000) உறுப்பினர்களை கொண்டுள்ள மிகப்பெரிய அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மட்டும்தான் என்பதை தமிழக அரசு ஊழியர்கள் நன்கறிவார்கள். சில சங்கங்களைப் போல் ஒரு அறையில் உள்ள சங்கத்திடம் ஒரு குறிப்பிட்ட தொகையை இணைப்புக் கட்டணமாக பெற்றுக் கொண்டதாலேயே அத்துறையில் உள்ள அனைவரும் நமது சங்க உறுப்பினர்கள் என கணக்கு காட்டுவது போன்றல்லாமல் ஆண்டுதோறும் ஒவ்வொரு உறுப்பினரையும் நேரில் சந்தித்து அவரது சம்மதத்துடன் உறுப்பினராக்குவது அரசு ஊழியர் சங்கம் மட்டுமே.

ஒவ்வொரு உறுப்பினர்களிடத்திலும் நேரிடையாக தொடர்பு கொண்டு உறுப்பினர் சேர்க்கை வரவு-செலவு கணக்குகளுக்கு உறுப்பினர்களின் ஒப்புதல் பெறுதல் நிர்வாகிகள் கூட்டம், வட்ட, மாவட்ட மாநில செயற்குழுக் கூட்டம் ஆண்டுதோறும் பேரவை இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மாநாடு என ஜனநாயகப்பூர்வமான நடவடிக்கைகளை கொண்டு இயங்கி வருவதால் அரசு ஊழியர்களின் அங்கீகாரத்துடன் ஏகோபித்த ஆதரவுடன் செயல்பட்டு வருகிறது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

ஊழியர்களின், மக்களின் நலனுக்கு எதிராக எந்த ஆட்சியாளர்கள் இருந்தாலும், ஆளும் ஆட்சியாளர்களுக்கு தலையசைக்கும் வழக்கமோ தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு கிடையாது என்பதை தமிழக முதல்வர் கவனத்தில் கொள்ள வேண்டும். ஊழியர்களுக்கு விரோதமான நடவடிக்கையோ அல்லது ஆணைகளையோ அரசு வெளியிடும் போது துணிவுடன் களத்தில் இறங்கி போராடுவதும், ஊழியர்கள் மற்றும் மக்கள் நலனுக்கு ஆதரவாக செயல்பட்டால் வரவேற்பதும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்தான். இந்நிலையில் கடந்த 3 ஆண்டுகளில் எங்களது நியாயமான கோரிக்கைகளுக்காக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சங்க நிர்வாகிகள் முதல்வரை நேரில் சந்திக்க வேண்டுமென பலமுறை கடிதம் மூலம் கேட்டுக் கொண்டபிறகும் சந்திக்க அனுமதிக்க வில்லை.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதிமுக பொதுக்குழு கூட்டத்தில் அரசு ஊழியர்களை போராட எதிர்க் கட்சிகள் தூண்டு விடுகிறார்கள் என்று



பேசியுள்ளார். எங்கள் சங்கத்தை பொறுத்த வரை மேலே சொன்னதுபோல் ஜனநாயக பூர்வமாக இயக்கங்களை நடத்துவதோடு மட்டுமல்ல, மக்களை நோக்கிய பயணம் என்ற அடிப்படையில், அரசின் நலன், திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வது, புயலால் பாதிக்கப்பட்டபோது நேரடியாக கவனத்திற்கு சென்று அர்ப்பணிப்புணர்வோடு மக்களுக்கு தேவையான அனைத்துவிதமான பணிகளையும் லட்சக்கணக்கான பொருளுதவிகள் செய்தது எங்கள் சங்கம்.

அதேபோல் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் படுத்தப்பட்ட மாணவர்கள் அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுக்கு இலவசமாக அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. இவ்வாறான மக்கள் நலன் சார்ந்த கோரிக்கையை முன்னெடுத்து செல்கின்ற அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

பொதுவாகவே தொழிற்சங்கங்கள் என்றாலே கம்யூனிஸ்ட் என முத்திரை குத்தப்படுகிறது. ஏனெனில் தொழிலாளர்கள் எப்போதும் நிர்வாகத்துடன் சமரசமற்றவர்கள் என்பதுதான். உழைப்பவனுக்கும் உழைப்பைச் சுரண்டு பவனுக்கும் உள்ள வர்க்க முரண்பாடே இதற்கு காரணம். தொழிலாளிக்கு வர்க்க அரசியல் நிச்சயமாக இருக்கும். ஆனால் கட்சி அரசியல் என்பது தொழிற்சங்கத்தில் இருக்காது. இதனை புரிந்து கொள்ள மறுப்பவர்களும், தான் தொழிற்சங்கங்களை தமது கட்சியின் அரசியல் பிடியில் வைத்திருப்பார்கள். அப்படிப்பட்ட தொழிற்சங்கங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது கோரிக்கைகளை முன் வைத்திட தயங்குவார்கள். எதிர்க்கட்சியாக இருக்கும்போது அரசியல் உணர்வுடன் எதிர்ப்பது போன்று நாடகமாடுவார்கள்.

அதே சமயத்தில் இடதுசாரிகளின் தலைமையிலோ அல்லது இடதுசாரி சிந்தனை கொண்டவர்களின் தலைமையில் உள்ள தொழிற்சங்கங்கள் யார் ஆட்சியில் இருந்தாலும் உழைப்பாளிகளின் ஊழியர் நலன்களுக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பர். இப்படிப்பட்ட தொழிற் சங்கங்கள் உலக நலனிலும், தேச நலனிலும், அனைத்து பகுதி மக்கள் நலனிலும், மக்கள் ஜனநாயகத்தை பாதுகாப்பதிலும் அக்கறை கொண்டவர்களாக இருப்பர். இதனை விரும்பாத ஏற்காதவர்கள் தமது சொந்த நலனை பாதுகாத்திட தொழிற் சங்கங்களை பயன்படுத்து வார்கள்.

எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சிகள், அரசு ஊழியர்களை போராட தூண்டி விடுகிறார்கள் என்று பேசியது ஏற்கத்தக்கதாக இல்லை. மேலே சொன்னது போல் தொடர்ந்து ஊழியர் மக்கள் நலனுக்காக போராடக்கூடிய இயக்கம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

## 11.11.2019 முதல் 15.11.2019 வரை பிரச்சார இயக்கம்

கடந்த செப்டம்பரில் 27, 28, 29 தேதிகளில் 13ஆம் மாநில மாநாடு நடைபெற்றது. அதில் 50-க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டதும் அறைகூவல் தீர்மானமாக இரண்டு கட்ட இயக்கம் நடத்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. முதல் கட்ட இயக்கம் 11.10.2019ல் தமிழக அரசு போராடுகின்ற சங்கத் தலைவர்களை பழிவாங்கும் நோக்கோடு தற்காலிக பணி நீக்கம், மாவட்ட மாறுதல்களை உடனடியாக கைவிட வேண்டும் என தமிழகம் முழுவதும் எழுச்சிகரமான ஆர்ப்பாட்டம் பெருந்திரள் முறையீடு நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்ட இயக்கம் கைவிடப்படும் மக்கள் நலன், சூறையாடப்படும் இளைஞர்களின் எதிர்காலம் மறுக்கப்படும் அரசு ஊழியர்கள் உரிமை தடுக்கப்படும் தரமான கல்வி என்று முழக்கத் துடன் தமிழகத்தின் 5 முனைகளிலிருந்து பிரச்சார இயக்கம் 11.11.2019 முதல் 15.11.2019 வரை ஊழியர்-மக்கள் சந்திப்பு இயக்கம் மிக எழுச்சியுடன் ராமேஸ்வரத்தில் துவங்கிய பிரச்சார பயணம் ராமநாதபுரம், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி, கரூர் மாவட்டங்களிலும், களியக்காவிளையில் துவங்கிய பிரச்சார பயணம் கன்னியாகுமரி,

திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களிலும், வேதாரண் யத்தில் துவங்கிய பிரச்சார பயணம் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கடலூர் மாவட்டங் களிலும், கூடலூரில் துவங்கிய பிரச்சாரம் நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டங்களிலும், ஓசூரில் துவங்கிய பிரச்சார பயணம் கிருஷ்ணகிரி, தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டங்களிலும் பிரச்சாரம் செய்தும் 17.11.2019 மற்றும் 18.11.2019 வட, தென் சென்னை மாவட்டங்களில் பிரச்சாரம் செய்தும் நிறைவாக 18.11.2019 அன்று சென்னையில் பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்களை அணிதிரட்டி அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாபெரும் கோட்டை நோக்கி பேரணி நடைபெற்றது.

அப்பேரணியை இந்திய மாணவர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் மாரியப்பன் துவக்கி வைத்தார். பேரணியாக சென்று அரசு விருந்தினர் மாளிகை முன்பு நிறைவாக கூட்டம் மாநிலத் தலைவர் மு.அன்பரசு தலைமை யேற்க, வரவேற்புரை மாநிலச் செயலாளர் பரமேஸ்வரி, கோரிக்கைகளை விளக்கி மாநில பொதுச் செயலாளர் தோழர் ஆ.செல்வம் பேசினார். சிறப்புரையாக சிஐடியு சார்பில் தோழர் சுகுமாறன் பொதுச் செயலாளர் வாழ்த்துரை வழங்கினார். மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன் நன்றி கூறினார்.

நிறைவு கூட்டம் முடிந்தவுடன் கோரிக்கை மனு கொடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர், தலைமைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அரசு செயலாளர் மற்றும் நிதித்துறை செயலாளர் ஆகியோரிடம் கோரிக்கை மனுவினை அளிப்பதற்கு அரசின் சார்பில் காவல் துறை வாகனத்தில் 15 மாநில நிர்வாகிகளையும் அழைத்துக் கொண்டு தலைமைச் செயலகம் சென்று அங்கு அரசின் சார்பில் அரசு செயலாளர் (பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை) அவர்களை சந்தித்து பேசப்பட்டது. உங்களது கோரிக்கை உடனடியாக முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்பதை உறுதி அளித்தார்.

பொதுவாக இப்பிரச்சார இயக்கம் வட்ட, மாவட்ட, முன்னணி ஊழியர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல இவ்வியக்கத்தின் மூலம் மக்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் நோட்டீசும், கருத்து படங்களும் அமைந்தது. பொதுவாக மக்கள் அரசு ஊழியர்கள் தங்களின் பொருளாதார கோரிக்கைக்காக மட்டும்தான் போராடுவார்கள் என்ற நிலை மாற்றி மக்களின் நலனுக்காகவும் குறிப்பாக இளைஞர்களின் வேலை வாய்ப்பு அரசு அலுவலகத்தில் நாலரை லட்சம் காலியிடம் பூர்த்தி செய் என்ற பொதுவான கோரிக்கைகளை முன் வைத்து செய்த பிரச்சாரம் பொதுவாக மக்கள் மத்தியில் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழகம் முழுவதும் 150-க்கும் மேற்பட்ட பொதுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளது. ஒவ்வொரு மாவட்டங் களிலும் தன்மைக்கேற்ப மிக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதுபோல் 125-க்கும் மேற்பட்ட முக்கியமான அரசு அலுவலக வளாகங்களில் வட்ட, மாவட்ட, முன்னணி ஊழியர்கள் இரு சக்கர வாகனத்தில் நமது சங்கக் கொடியை கட்டிக்கொண்டு மிக உற்சாகமாகவும் மிக எழுச்சியான பிரச்சாரம் ஊழியர்களிடம் கொண்டு செல்லப்பட்டது. இது இளம் அரசு ஊழியர்கள் மத்தியில் நமது அமைப்புக்கு புது ரத்தம் பாய்ச்சியது போல் இருந்ததாக அமைந்திருந்தது. இப்பிரச்சாரம் 6789 கி.மீ. பயணம் மேற்கொண்டது.

ஆம்... தோழர்களே 13ஆம் மாநில மாநாட்டில் நூற்றுக்கணக்கான பிரச்சனைகளை தீர்மானங்களாகவும், கோரிக்கைகளாகவும் நம் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது. அதில் மக்களை எளிதில் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளச் செய்வதன் மூலமே, மக்களின் உணர்வுகளை தட்டி எழுப்பியதன் மூலமே அவர்களை நம்முடன் இணைத்துக் கொண்டு மத்திய, மாநில அரசுகளின் மக்கள் விரோத,

ஊழியர் விரோத கொள்கைகளுக்கு எதிராக போராட வேண்டியுள்ளது. அதில் குறிப்பாக

## வேலையின்மை

இந்தியாவிலும், தமிழகத்திலும் இன்று உள்ள முக்கியமான பிரச்சனை வேலையின்மை. இந்தியாவில் 45 ஆண்டுகள் இல்லாத நெருக்கடி ஏற்பட்டுள்ளது. உலகின் இளமையான நாடு இந்தியா. நாட்டின் மக்கள் தொகையில் 15 - 24 வயதுடையவர்கள் 19 கோடி பேர். இளைஞனுக்கு மிகப்பெரிய எதிர்கால கனவே அவனுடைய வேலை பற்றிதான். ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடியே முப்பது லட்சம் பேர் வேலை வாய்ப்பு சந்தையில் இணைகின்றனர்.

சமீபத்திய அறிக்கையின்படி அக்டோபர் 2018-ல் நாட்டின் வேலையிமை என்பது 6.9 சதவீதம் உயர்ந்துள்ளது. நாட்டில் 295 லட்சம் பேர் வேலை தேடிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நம் பிரதமர் மோடி அவர்கள் பக்கோடா விற்பவர்கள் கூட ஒரு நாளைக்கு 200 ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கிறார்கள். எனவே வேலை என்பது பிரச்சனையல்ல என்பதோடு மட்டுமல்ல, ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்று மோடி அரசாங்கம் தேர்தல் வாக்குறுதி அளித்தது. அதை செயல்படுத்த முடிந்ததா?

அரசுத் துறையில் மறுசீரமைப்பு என்ற பெயரில் தனியாருக்கு தாரை வார்க்கின்ற போக்கு நீடிக்கிறது. அரசு அலுவலகங்களில் அரசு ஆணை எண். 56ன் மூலம் பணியிடங்கள் வெட்டி குறைக்கப்படுவது மட்டுமல்ல, இனிமேல் அரசு பணிக்கு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் உள்ளே வர முடியாத நிலையும் அவுட்சோர்சிங், ஒப்பந்த முறை அத்துக்கூலிக்கு ஆள் அமர்த்தும் நிலையை மத்திய, மாநில அரசுகள் மிக வேகமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

## தொகுப்பூதியம் சிறப்பு கால முறை ஊதியம்

அடிமைத்தனம் தொடங்கியதற்குக் காரணம் இனவேறுபாடோ, நிறவேறுபாடா அல்ல... பொருளாதாரம்தான்.

மலிவான உழைப்பைத் தேடி ஒரு கூலியைத் தேடி...

நிலவுக்குக்கூடப் போயிருப்பார்கள்... ஆனால்,

நிலவைவிட பக்கத்தில் இருந்தது ஆப்பிரிக்கா. 1619ல் அங்கே நாலணாவில் தொடங்கிய அடிமை வியாபாரம் இங்கே தமிழகத்தில் இத்தனை ஆண்டு கழித்து கொத்தடிமை கூலி முறை தொடர்கிறது. இதன் விலை மட்டும் ஏறுவதே இல்லை.

தொகுப்பூதிய, சிறப்பு கால முறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர், ஊர்ப்புற நூலகர், எம்ஆர்பி செவிலியர் போன்ற ஊழியர்களின் பல்வேறு பிரச்சனைகள் குறித்து அரசிடம் முறையிட்டோம்.

எல்லாம் உண்மை, நியாயம் என ஏற்றுக்கொண்டு நிதி இல்லை, பகுதி நேர ஊழியர்கள், முடிந்ததைச் செய்திருக்கிறோம் என்கிறது முடிந்ததை அல்ல... அரசு செய்ய வேண்டியதைச் செய்ய வைக்க வலுவான போராட்டங்கள்... அதற்கான வியூகங்கள் வகுப்பது இன்றைய உடனடிக் கடமைகளாக மாறியுள்ளன.

தோழர்களே!

இவை மட்டுமல்ல இந்த சமூகம் நம்மிடம் நிறைய எதிர்பார்க்கிறது.

கடமைகளைச் சுட்டிக்காட்டி போராட அழைக்கிறது. அது வழிகாட்டும் ஒளிவிளக்காய் தன் கடந்தகால அனுபவங்களின் பதிவு செய்திருக்கிறது.

அதன் வெளிச்சத்தில் அதன் அழைப்பைத் தட்டிக்கழிக்காமல் தள்ளிப் போடாமல் ஒதுங்கிப் போகாமல் சமூக மாற்றத்திற்கான போராட்டத்தில் இறுகப் பிணைத்துக் கொள்ளும் உண்மையான போராளியாவோம்.

ஒன்றுபடுவோம்!

போராடுவோம்!!

வெற்றி பெறுவோம்!!! ❑

# இன்னா செய்தாரை ஒறுத்தல்!

கூட்டம் தொடங்குவதற்கு சில நிமிடங்கள் இருந்தன. அந்த இடைப்பட்ட நேரத்தில் சில தோழர்கள் காரசாராமாக பேசிக்கொண்டிருந்தனர்.

“இந்த இயக்கத்துலயே இருந்து, இந்த இயக்கத்துக்காக பாடுபட்டுட்டு கடைசியில் இந்த இயக்கத்தின் மேலயே குறையைச் சொல்லிட்டு போனது மட்டுமில்லா இந்த சங்கத்தின் ரிஜிஷ்டிரேஷனைக்கூட கேள்வி எழுப்பி இயக்கத்தையே ஒழிச்சுக் கட்டிடனும்னு கங்கணம் கட்டி செயல்படறவங்களை என்னன்னு சொல்றது.’’

“இப்படிப்பட்ட ஆளுங்களை நடுரோட்டுல நிக்க வச்சு...’’

“சுட்டுடக்கூடாது தோழர் அவங்களையெல்லாம் வச்சு செய்யணும். இந்த இயக்கத்துக்கு அவங்க செஞ்சிருக்கிற துரோகத்தை ஒவ்வொரு உறுப்பினருக்கும் எடுத்துச் சொல்லி அவங்களை சந்தி சிரிக்க வைக்கணும். நாம யாருனுன்னு அவங்களுக்கு காட்டணும்.’’

“ஆனா நம்ம தலைமை ஏன் அவங்க மேல நடவடிக்கை எடுக்காம சும்மா இருக்குன்னு தெரியலயே தோழர்.’’

“இது சம்பந்தமா தலைவர் கிட்டேயும் நிர்வாகிகள் கிட்டேயும் இந்த கூட்டம் முடிஞ்சதும் பேசி கண்டிப்பா சங்கத்துக்கு எதிரா செயல்படறவங்க மேல நடவடிக்கை எடுக்க வைக்கணும். இத்தகைய ஆளுங்களை தட்டி வச்சா போதாது தோழர். இயக்கத்துல இருந்து வெட்டி வெளியே வீசணும்’’ என்றெல்லாம் ஒவ்வொருவரும் ஒரே பேச்சாக பேசிக்கொண்டிருந்தனர்.

தோழர் சண்முகம் மைக்கின் முன்னே வந்து நின்றார். அவரின் பேச்சைக் கேட்க அனைவரும் ஆவலாய் இருந்தனர். “தோழர்களே ஒரு இயக்கம் என்பது கரடியைப் போல் இருக்க வேண்டும்’’ என்று ஆரம்பித்தார் சண்முகம்.

உடனே கூட்டத்தில் உட்கார்ந்திருந்த ஒரு தோழர் எழுந்து ‘‘தோழர் இது என்ன புதுக்கரடியா பழைய கரடியா?’’ என்று கேட்டார் .

“நான் சொல்ற கதையை கேட்டதும் அது உங்களுக்கு புரிஞ்சுடும்’’ என்றவர் தொடர்ந்தார்.

“ஒரு வேடன். காட்டுக்குள்ள வேட்டையாட றதுக்காக போனான். வழக்கமா இவன்தான் வேட்டையாடணும். ஆனா அன்னிக்கு பாருங்க, அவன் கெட்ட நேரம் ஒரு புலி இவனை வேட்டையாட துரத்திகிட்டு வந்துது. வேடனுக்கு தப்பிச்சா போதும்கிற எண்ணம் வந்துட்டுது. கொண்டுவந்த அம்பு வில்லு எல்லாத்தையும் போட்டுட்டு பின்னங்கால் பிடறியில விழ ஓடறான். புலியும் வேடனை விடறமாதிரியில்ல. இன்னிக்கு ரெண்டுல ஒண்ணு பாத்துடறதுன்னு ஓடிக்கிட்டிருக்கு. எவ்வளவு நேரம் ஓடறது. ரொம்ப மூச்சு வாங்க ஆரம்பிச்சுடுது வேடனுக்கு. அதனால அவன் பக்கத்துல இருந்த ஒரு மரத்துமேல ஏறி ஒரு கிளையில் உக்கார்ந்துகிட்டான். ‘அப்பாடா’ன்னு ஒரு பெருமூச்சு விட்டுகிட்டே அண்ணார்ந்து பார்த்தான். பார்த்தா அவன் தலைக்கு மேல இருக்கற கிளையில ஒரு கரடி உட்கார்ந்திருக்கு. இவனை துரத்தி வந்த புலி மரம் ஏற முடியாம கீழயே மரத்தை சுத்திகிட்டிருக்கு. வேடனுக்கு ஒரே பயமாயிட்டுது. மேல கரடி, கீழே புலி.

“புலி அந்த வேடனை வேட்டையாடறதுக்கு என்ன வழின்னு யோசிக்க ஆரம்பிச்சுது. கொஞ்சம் புத்திசாலித்தனமா யோசிச்சா அது சாத்தியம்னு முடிவு பண்ணுச்சு. வேடனுக்கு மேலே இருக்கற கிளையில உட்கார்ந்திருக்கற கரடிகிட்ட புலி ஒரு டீல் பேசுச்சு. ‘கரடியாரே அந்தக்கிளையில உட்கார்ந்திருக்கானே வேடன் அவன் இந்த காட்டுல இருக்கற விலங்குகளையெல்லாம் வேட்டையாடறவன். நம்ம ரெண்டு பேருக்குமே விரோதி. அதனால அவனை அங்கேருந்து கீழே தள்ளிவிடு. மத்ததை நான் பாத்துக்கிறேன்’னு சொன்னது.

அதுக்கு கரடி என்ன சொல்லுச்சு தெரியுமா?, “புலியாரே, எப்போ இந்த வேடன் நான் இருக்கற இந்த மரத்துல வந்து ஏறிக்கிட்டானோ அப்பவே அவன் எனக்கு அடைக்கலம் ஆயிட்டான்னு அர்த்தம், அடைக்கலமா வந்து சேர்ந்தவனை கீழே தள்ளிவிடறது தர்மமில்ல’’ன்னு சொல்லிட்டு கொஞ்ச நேரம் ஆனதும் கரடி தூங்க ஆரம்பிச்சுடுது. கரடி பேசுனதை நினைச்சு புலிக்கு கோபம் கோபமா வந்தது. அதனால இப்போ அது வேடன்கிட்டே சொன்னது, “இதோபார் வேடனே, இப்ப நீ, தூங்கிக்கிட்டிருக்கற அந்தக் கரடியை பிடிச்சு கீழே தள்ளு. நான் உன்னை ஒண்ணும் செய்யாம விட்டுடறேன்’’னுது.

வேடன் யோசிச்சுப் பார்த்தான். எப்படியோ நாம பிழைச்சா போதும்கிற மனுஷ குணம் அவனுக்கு வந்துட்டுது. அதனால நன்றியில்லாத ஒரு காரியத்தைச் செய்யப் போனான். ஆமாம் தூங்கிக் கிட்டிருந்த கரடியை தள்ளிவிடறதுக்காகப் போனான். தூங்கிக்கிட்டிருந்த கரடி அந்தசமயம் பார்த்து

சட்டுன்னு முழிச்சுகிட்டது. சடார்னு தாவி இன்னொரு கிளைக்கு போயிட்டுது.

இப்ப புலி மறுபடியும் பேச ஆரம்பிச்சுது, "இதோபார் கரடியாரே இந்த வேடன் கொஞ்சம் கூட நன்றி விசுவாசம் இல்லாம உன்னை கீழே தள்ளிவிடப் பார்த்தான். அப்பேர்ப்பட்ட ஒருவனை நீ கீழே தள்ளிவிட்டா என்ன? அவனுக்காக ஏன் இரக்கம் காட்டிக்கிட்டிருக்கே?''ன்னுது.

இப்பவும் கரடி தன்னுடைய கொள்கையை மாத்திக்கலே "இதோ பாரு புலியே, இப்பவும் நான் அந்த வேடனை கீழே தள்ளிவிட மாட்டேன். எல்லோரையும் நேசிக்கிறவங்க யாரோ ஒருசிலர் செய்யற தீமைகளை பொருட்படுத்த மாட்டாங்க. அவங்க கெடுதல் பண்ணிட்டாங்களேன்னு திருப்பிக் கிட்டு அவங்களுக்கு கெடுதல் பண்ணமாட்டாங்க. அதனால நான் அந்த வேடனை கீழே தள்ளிவிட மாட்டேன்''னு உறுதியா சொல்லிடுச்சு அந்தக் கரடி. அதைக்கேட்ட வேடனுக்கு கண்ணுல இருந்து தண்ணியா கொட்டுச்சு. மிருகங்களுக்கு இருக்கிற இரக்க குணம் நம்மகிட்ட இல்லியேன்னு வருந்தினான். அன்றிலிருந்து அவர் மிருகங்களை வேட்டையாடறதை விட்டுட்டு விவசாயம் செய்ய ஆரம்பிச்சான்.

இந்த கதையை கேட்டதும் உங்களுக்கு என்ன தோணுது?''

கூட்டம் அமைதியாக இருந்தது. "இதைத்தான் உத்தமர் குணம்னு சொல்வாங்க. இராமாயணத்துல சீதையை துன்புறுத்தின அரக்கிகளை கொல்றதுக்கு அனுமன் அனுமதி கேட்டப்ப சீதை அனுமனுக்கு சொன்ன கதை இது. இந்த உத்தமர் குணத்தை நாமும் பின்பற்றுவோமா?'' என்று கேட்க கூட்டத்தில் இருந்த அனைவரும் தலையாட்டினர். கூட்டம் முடிந்ததும் தலைமையிடம் பிராது சொல்ல வேண்டும் என்று எண்ணிய தோழர்களும் அமைதியாயினர். இயக்கத்திற்கு எதிராக செயல்படும் தோழர்களின் அறியாமையை நினைத்து அவர்கள் வருந்தினர்.

**- ஜிஜி**

## சந்திப்புகளும் முறையீடுகளும்

*மாநில மாநாட்டின் அறைகூவல் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழகத்தின் ஐந்து முனைகளிலிருந்து ஊழியர் - மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கத்தின் நிறைவாக 18.11.2019 அன்று கோட்டை நோக்கி பேரணி மிக எழுச்சியாக நடைபெற்றது. பேரணி முடிவடைந்தவுடன் 5 அம்ச கோரிக்கைகளை அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு விரைந்து நடவடிக்கை எடுக்கவும் நேரடியாக அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை பேச்சு வார்த்தைக்கு அழைக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், தலைமை செயலாளர், நிதித்துறை செயலாளர் ஆகியோருக்கு நமது சங்கத்தின் சார்பில் கடிதம் அளிக்கப்பட்டது. இதனை கொடுக்க மாநில நிர்வாகிகள் அனைவரையும் காவல் துறை வாகனத்தில் அழைத்துச் சென்று அரசு செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அவர்களை சந்தித்து பேசப்பட்டு முறையீட்டு கடிதம் அளிக்கப்பட்டது.*

*தூத்துக்குடி மாவட்ட அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவரும், தூத்துக்குடி காமராஜர் கல்லூரியில் ஆய்வக உதவியாளராக பணியாற்றி 31.10.2019 அன்று அரசு பணியிலிருந்து ஓய்வு பெற இருந்து தோழர் ம.சுப்ரமணியன் அவர்களை ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார் என்ற காரணத்தின் அடிப்படையில் பணி ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்க இயலாது என திருநெல்வேலி மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில் தூத்துக்குடி மாவட்ட அரசு ஊழியர் மாவட்ட மைய கடிதத்தின் அடிப்படையில் 20.11.2019 அன்று கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை அவர்களை மாநில மையத்தின் சார்பில் மாநிலத் தலைவர் தலைமையில் மாநில நிர்வாகிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதனை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என இயக்குநர் உறுதியளித்தார்.*

*ஊரக வளர்ச்சித் துறை செயலாளரை சந்திக்க சென்றபோது பணி நிமித்தமாக வெளியூர் டில்லி சென்றதாக கூறப்பட்டது. பின்னர் முறையீட்டு கடிதம் வழங்கப்படும்.*

*முன்னாள் மாநில துணைத் தலைவர் மு.சுப்ரமணியன் தற்காலிக பணிநீக்கம் குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரை சந்திக்கச் சென்றோம். பணி நிமித்தமாக வெளியூர் சென்றதால் மீண்டும் பின்னர் முறையீட்டு கடிதம் வழங்கப்பட்டு பேசப்படும்.* ❑

# ஊழியர் - மக்கள் சந்திப்பு இயக்கம்
# 18.11.2019 கோட்டை நோக்கி பேரணி

**த**ஞ்சையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 13 வது மாநில மாநாட்டிலே எடுக்கப்பட்ட அறைகூவல் தீர்மானத்தின் அடிப்படையில் பொதுமக்கள் இளைஞர்கள் பிரச்சனையை மையப்படுத்தி, 11.11.2019 முதல் 15.11.2019 வரை களியக்காவிளை, இராமேஸ்வரம், வேதாரண்யம், ஓசூர் மற்றும் கூடலூர் ஆகிய தமிழகத்தின் 5 முனைகளி லிருந்து ஊழியர்-மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்பது ஊழியர்களின் கோரிக்கைகளுக்காக மட்டும் போராடும் சங்கமாக இருந்ததில்லை, எப்பொழுதெல்லாம் பொதுமக்களுக்கு பிரச்சனை என்று வருகிறதோ அப்பொழு தெல்லாம் மக்களின் உடனிருந்து அதனை தீர்த்து வைக்க பல்வேறு இயக்கங்களை நடத்தியிருக்கின்றது. பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பால் விலை உயர்வு, கேஸ் விலை உயர்வு, பேருந்து கட்டண உயர்வு, ரயில் கட்டண உயர்வு, பெட்ரோல் மற்றும் டீசல் உயர்வு போன்றவற்றின் போது மக்களுக்காக தமிழகம் முழுவதும் பல்வேறு போராட்டங் களை நடத்தி விலை உயர்வை கட்டுப்படுத்தி யிருக்கிறது. அதே போன்று நாட்டிலே பேரழிவை ஏற்படுத்தும் பூகம்பம், சுனாமி, மழை வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்கள் எங்கு நடைப்பெற்றாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு அரசு ஊழியர்கள் தங்களுடைய ஊதியத்தை வழங்கி பாதுகாப்பது மட்டுமின்றி, பாதிக்கப் பட்ட இடங்களுக்கு சென்று உணவு, உடை மற்றும் மருந்து பொருள்கள் போன்ற நிவாரணப் பொருட்களை வழங்குவது, மற்றும் உடனிருந்து மருத்துவம் பார்ப்பது போன்ற அனைத்தையும் செய்து வருகின்றனர்.

இன்றைய சூழலில் தமிழக அளவிலும் இந்திய அளவிலும் முக்கிய பிரச்சனையாக இருப்பது எங்கும் வியாபித்து இருக்கக்கூடிய வேலையின்மைதான். தமிழக அளவிலே படித்து முடித்து பட்டம் பெற்று வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து வேலைக்காக காத்திருக்க கூடிய இளைஞர்கள் 85 லட்சம்பேர். எனவே அவர்களுக்கு தமிழக அரசுத் துறைகளிலே காலியாக உள்ள 4.5 லட்சம் பணியிடங்களை தந்து நிரப்பிட கோரி நாம் போராடிவரும் நிலையில், இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கின்ற, அரசுத்துறையை தனியார் வசம் ஒப்படைக் கின்ற, ஒட்டு மொத்த அரசு துறைகளை வேரோடு அழிக்கின்ற வகையில் தமிழக அரசு அரசாணை எண்.56 என்ற ஒன்றை போட்டு தமிழக அரசு துறையில் தேவையற்ற மிகை பணியிடங்கள் என்பதை கண்டறிந்து ஒழிக்கின்றோம் என்ற பெயரில் மேலும் பல்லாயிரம் பணியிடங்களை ஒழிப்பதற்குரிய வேலைகளை விரைந்து செயல்படுத்தி வருவதையும் இதனால் இந்தியாவிலேயே 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை நடைமுறை படுத்தி வரும் தமிழகத்திற்கு அநீதி இழைக்கப் படுகிறது என்பதையும் மக்களிடையே பிரச்சாரத்தின் மூலம் கொண்டு செல்லப் பட்டது. மக்கள் கூடும் இடங்களில் பிரச்சாரத்தை செய்தபோது நாம் தந்த புள்ளி விவரங்களை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டறிந்த தோடு மட்டுமின்றி நம்மிடம் மேலும் பல்வேறு தகவல்களை கேட்டறிந்தனர்.

தமிழக அரசுத்துறையில் சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், ஊர்புற நூலகர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், மற்றும் MRB செவிலியர்கள் போன்ற 3.5 லட்சம் ஊழியர்கள் தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியத்திலே பல்வேறு ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் சூழலில் அவர்களை வரையறுக்கப்பட்ட ஊதியத்தின் கீழ்க்கொண்டு

வர அரசு மறுக்கின்றது என்ற தகவலும் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது, அதே போன்று அரசு துறையில் நிரப்பபடுகின்ற பணியிடங்கள் அனைத்தும் சொற்ப ஊதியத்தில் புற ஆதாரமுறையில் மட்டுமே நிரப்பப்படுகின்றது. இதன் மூலம் தனியார் நிறுவனங்களே பயனடைகின்றனர் என்பதை கூறியபோது மக்களிடையே தற்போதைய மத்திய/மாநில அரசாங்கங்களின் மீது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியது.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டம் (IFHRMS) கொண்டு வந்து அதன்மூலம் கருவூலத்துறையை முற்றிலுமாக ஒழித்துகட்டி முற்றிலுமாக தனியார் வசம் ஒப்படைக்கும் பணியை அரசாங்கம் வேகமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அதே போன்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும் பணியிடங்கள் என்பது மிக சொற்ப அளவிலேயே இருப்பதையும், வேலை வாய்ப்பு அலுவலகம் பதிவு செய்வதற்கு மட்டுமே உள்ளதே தவிர வேலை வாய்ப்பு உரிய அளவில் வழங்குவதில்லை என்பதை யும் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது.

லாபம் ஈட்டுகின்ற பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் அடிமாட்டு விலைக்கு தனியாருக்கு தாரை வார்ப்பதையும் பிரச்சாரத்தின் போது பொது மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது.

மக்களும் அரசு ஊழியரும் வேறல்ல, அரசு ஊழியர் என்பவர் பொது மக்களின் ஒரு அங்கமே, மக்கள் நலன் காக்க அரசின் அனைத்து திட்டங்களையும் பொது மக்களுக்கு கொண்டு செல்லும் பணியை அரசு ஊழியர்கள் செய்து வருகின்றனர் என்பதையும் பிரச்சாரத்தின் மூலம் மக்களிடையே கூறிய போது வரவேற்பு இருந்தது.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 300-க்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களிலும் ஊழியர் மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது. இதன் மூலம் பொதுமக்களையும் இளைஞர் களையும் அரசாங்கம் வஞ்சித்து வருவதை உணர்ந்தனர். நம்முடைய பிரச்சாரத்தினை இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை ஆர்வமுடன் கேட்டறிந்தனர். இதனை யொட்டி 18.11.2019 அன்று நடைப்பெற்ற கோட்டை நோக்கிய பேரணிக்கு அரசும் காவல்துறையும் அனுமதி மறுத்த நிலையிலும் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஊழியர்கள் உற்சாகத்துடனும் எழுச்சியுடனும் கலந்துக் கொண்டனர். கடும் வெயிலும் பொருட்படுத்தாது தலைவர்களின் எழுச்சி உரைகளை கேட்டனர்.

பேரணி 11 மணிக்கு மவுண்ட் ரோடு வாலாஜா சாலையிலிருந்து துவங்கியது. பேரணியை இந்திய மாணவர் சங்க மாநில செயலாளர் வீ. மாரியப்பன் துவக்கி வைத்தார். மாநிலத் தலைவர் மு.அன்பரசு தலைமை ஏற்று நடத்தினார். மாநிலச் செயலாளர் சி.பரமேஸ்வரி வரவேற்புரையாற்றினார். பொதுச் செயலாளர் ஆ.செல்வம் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். சிஐடியு பொதுச் செயலாளர் ஜி.சுகுமாறன் சிறப்புரை ஆற்றினார். மாநில பொருளாளர் மு.பாஸ்கரன் நன்றி கூற பேரணி வெற்றிகரமான பேரணியாக நிறைவு பெற்றது.

பேரணி முடிவடைந்தவுடன் 5 அம்ச கோரிக்கைகளை அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டும் விரைந்து நடவடிக்கைஎடுக்கவும் நேரடியாக அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை பேச்சுவார்த்தைக்கு அழைக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு கோரிக்கை மனு நமது சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்டது. அம்மனுவினை கொடுக்க மாநில நிர்வாகிகள் அனைவரையும் காவல்துறை வாகனத்தில் அழைத்துச் சென்று அரசு செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்ததுறை அவர்களை சந்தித்து பேசப்பட்டு முறையீட்டு கடிதம் அளிக்கப்பட்டது.

**- இரா.ந.நம்பிராஜன்**

## தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பிரச்சார இயக்கம் நடைபெற்ற விவரம்

### 1. இராமேஸ்வரம்

**மு. அன்பரசு**, மாநிலத் தலைவர்
**இரா.ந. நம்பிராஜன்**, மாநில செயலாளர், **தெ.வாசுகி**, மாநில செயலாளர்

***இராமேஸ்வரம் :*** *இராமேஸ்வரம் 4 சாலை சந்திப்பு, இராமேஸ்வரம் பேருந்து நிலையம், உச்சிப்புளி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கருவூலகம், சமூகநலத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, முதன்மை கல்வி அலுவலகம், சர்வசிக்சஸா அபியான், நிலஅளவைத்துறை, நிலஅளவை பதிவுருக்கள் துறை, பேரிடர் அபாய மேலாண்மைத் திட்டத்துறை அலுவலகம், சிபிடிஆர்எம் அலுவலகம், ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம், மாவட்ட ஊராட்சி அலுவலகம், மாவட்ட சிறுசேமிப்பு அலுவலகம், பள்ளிக்கல்வித் துறை, மாவட்ட உடற்கல்வி ஆய்வகம், மாவட்ட சமூக தணிக்கை அலுவலகம், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மாவட்ட கல்வி அலுவலகம்*

***மதுரை :*** *அரசு அச்சகம், கோ.புதூர் (பேருந்து நிலையம்), திருப்பரங்குன்றம் 16 கால் மண்டபம், தல்லாகுளம் பொதுப்பணித் துறை வளாகம், மதுரை மருத்துவக் கல்லூரி, மாவட்ட கருவூலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை வணிகவரித்துறை அலுவலகம், சத்துணவு ஊழியர் சங்க பேரணி, கோட்ட பொறியாளர் அலுவலகம், தாமரை தொட்டி, கிழக்கு மேற்கு ஊராட்சி அலுவலகம்*

***மதுரை புறநகர் :*** *திருமங்கலம் தேவர் சிலை அருகில், கள்ளிக்குடி பேருந்து நிறுத்தம், தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், பேரையூர் பேருந்து நிலையம், சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு, உசிலம்பட்டியில் இருசக்கர வாகன பேரணியுடன், கோட்டாட்சியர் அலுவலகம் முன்பாக, செல்லம்பட்டி பேருந்து நிலையம், சோழவந்தான் பேருந்து நிறுத்தம், வாடிப்பட்டி பேருந்து நிலையம்*

***சிவகங்கை :*** *ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நகராட்சி அலுவலகம், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, இந்து சமய அறநிலையத்துறை அலுவலகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கூட்டுறவுத்துறை அலுவலகம், வட்டாட்சியம் அலுவலகம், பொதுமக்கள் சந்திப்பு - வாரச்சந்தை நகராட்சி அலுவலகம், காரைக்குடி புதிய பேருந்து நிலையம் - மக்கள் சந்திப்பு*

***புதுக்கோட்டை :*** *திருமயம் வட்டாட்சியர் அலுவலகம், திருமயம் (பேருந்து நிலையம்), அரிமலம் யூனியன் ஆபிஸ், அரிமலம் (கடை வீதி), அறந்தாங்கி (கடைவீதி), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டைபழைய பஸ் ஸ்டாண்ட், புதுக்கோட்டை (சின்னப்பா பூங்கா), அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, அன்னவாசல் யூனியன் ஆபிஸ், இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகம், விராலிமலை வட்டாட்சியர் அலுவலகம்*

***திருச்சிராப்பள்ளி :*** *நெடுஞ்சாலைத்துறை அலுவலகம் நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம் குடும்பநலத்துறை அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்*

***கரூர் :*** *குளித்தலை (பேருந்து நிலையம்), கிருஷ்ணராயபுரம் (பேருந்து நிலையம்), கரூர் பேருந்து நிலையம் R.M.S அலுவலகம் முன்பு, கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், க.பரமத்தி (பேருந்து நிலையம்), அரவங்குறிச்சி தாலுகா ஆபிஸ் வளாகம், கரூர் உழவர் சந்தை பொதுக்கூட்டம்*

## 2. களியக்காவிளை

**ஆ.செல்வம்**, பொதுச் செயலாளர்
**ஆர்.மங்களபாண்டியன்**, மாநில துணைத் தலைவர்
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**, மாநிலச் செயலாளர்

**கன்னியாகுமரி :** தாலுகா அலுவலகம், விளவங்கோடு நகராட்சி அலுவலகம், குழித்துறை பிடிஓ, தாலுக்கா அலுவலகம், கிள்ளியூர் தாலுக்கா அலுவலகம், தக்கலை (கல்குளம்) மாவட்ட கல்வி அலுவலர், நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில் களியகாவிளை கருங்கல் பேரூராட்சி அலுவலகம் முன்பு கன்னியாகுமரி மருத்துக் கல்லூரி முன்பு வடசேரி அண்ணாசிலை அருகில்

**திருநெல்வேலி** : பொதுப்பணித்துறை அலுவலகம், வள்ளியூர் பிடிஓ அலுவலகம், வள்ளியூர் வணிகவரித்துறை அலுவலகம், நாங்குனேரி வணிகவரித்துறை அலுவலகம், திருநெல்வேலி வேளாண்மைத்துறை அலுவலகம், திருநெல்வேலி

**தூத்துக்குடி :** பிடிஓ அலுவலகம் புதுக்கோட்டை, வணிகவரித்துறை அலுவலகம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி 1-கேட் தூத்துக்குடி எட்டயபுரம் பேருந்து நிலையம் எதிரில், தாலுக்கா அலுவலகம், எட்டயபுரம் தாலுக்கா அலுவலகம், கோவில்பட்டி
**விருதுநகர்** தாலுக்கா அலுவலகம், சாத்தூர் நகராட்சி அலுவலகம், திருதங்கல் நகராட்சி அலுவலகம், ராஜபாளையம் சாத்தூர் வாலிபர் சங்கம் பங்கேற்பு, ஸ்ரீவில்லிபுத்தூர்

**தேனி :** கம்பம் பொதுப்பணித்துறை அலுவலகம், உத்தமபாளையம் தாலுகா அலுவலகம், பிடிஓ, டிஇஓ, உத்தமபாளையம் நகராட்சி அலுவலகம், போடி தாலுக்கா அலுவலகம், பெரியகுளம் தேனி மருத்துவக்கல்லூரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி

**திண்டுக்கல் :** வணிகவரித்துறை அலுவலகம், திண்டுக்கல் வட்டார வளர்ச்சி அலுவலகம், திண்டுக்கல் வட்டாட்சியர் அலுவலகம், வேடசந்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திண்டுக்கல் கட்டாஸ்பத்திரி, தண்ணீர் தொட்டி, திண்டுக்கல் வத்தலக்குண்டு சந்தைகடை பேருந்து நிலையம், திண்டுக்கல்

## 3. வேதாரண்யம்

**மு. ஞானதம்பி**, மாநில துணைத் தலைவர்
**உ. சண்முகம்**, மாநில செயலாளர் **என். வெங்கடேசன்**, மாநில துணைத் தலைவர்

**நாகப்பட்டினம் :** வேதாரண்யம் பேருந்து நிலையம், தலைஞாயிறு பேருந்து நிலையம், தலைஞாயிறு தாலுக்கா அலுவலகம், திருக்குவளை தாலுக்கா அலுவலகம், கீவளூர் தாலுக்கா அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம், கீவளூர் பேருந்து நிலையம், வட்டாட்சியர் அலுவலகம் தரங்கம்பாடி, பொறையார் பேருந்து நிலையம், சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம், சீர்காழி வட்டார வளர்ச்சி அலுவலகம், சீர்காழி மருந்து நிலையம் மயிலாடுதுறை, கிளைச்சிறை எதிரே, கடைத்தெரு

**கடலூர் :** சிதம்பரம் பேருந்து நிலையம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், புவனகிரி வட்டார வளர்ச்சி அலுவலகம், புவனகிரி பேருந்து நிலையம், உழவர் சந்தை எதிரில், கடலூர் அஞ்சல் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகம், பண்ருட்டி பேருந்து நிலையம், வடலூர் பேருந்து நிலையம், விருதாச்சலம் கடைத்தெரு, வேப்பூர் கடைத்தெரு.

**பெரம்பலூர் :** பெரம்பலூர் அரசு மருத்துவமனை, பழைய பேருந்து நிலையம், தாலுக்கா அலுவலகம், தாலுக்கா அலுவலக வளாகம், பாலக்கரை ரோடு

**அரியலூர் :** மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பேருந்து நிலையம், செந்துரை RDO அலுவலகம், ஜெயங்கொண்டம் காந்திசிலை முன்பாக

**தஞ்சாவூர் :** பட்டுக்கோட்டை மணிகூண்டு, பட்டுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம், பட்டுக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலகம், ஒரத்தநாடு வட்டாட்சியர் அலுவலக வளாகம், ஒரத்தநாடு பேருந்து நிலையம், தஞ்சாவூர் சாந்தாபிள்ளை கேட், பனகல் மாளிகை, வணிகவரித்துறை அலுவலகம், பாபநாசம் பேருந்து நிலையம், வட்டார வளர்ச்சி அலுவலகம், கும்பகோணம் வணிகவரித்துறை அலுவலகம் காந்தி பூங்கா.

**திருவாரூர் :** வலங்கைமான் மாரியம்மன் கோவில் முன்பாக, வலங்கைமான் வட்டாட்சியர் அலுவலகம், குடவாசல் வட்டாட்சியர் அலுவலகம், நன்னிலம் வட்டாட்சியர் அலுவலகம், புதிய இரயில் நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருத்துறைப்பூண்டி வட்டார வளர்ச்சி மற்றும் வட்டாட்சியர் அலுவலகம், கருவூல அலுவலகம், நீடாமங்கலம் பெரியார்சிலை முன்பாக, மன்னார்குடி பந்தலடி கடைத்தெரு

## 4. கூடலூர்

**ராஜ்குமார்**, மாநில துணைத்தலைவர்
**மு.சீனிவாசன்**, மாநில துணைத்தலைவர், **பரமேஸ்வரி** மாநில செயலாளர்

**நீலகிரி :** கூடலூர் - வட்டாட்சியர் அலுவலகம், ஊட்டி - மாவட்ட ஆட்சியர் அலுவலகம், டிங்கர்ஹோஸ்ட் ஆட்டோ ஸ்டேன்ட் கோத்தகிரி - பேருந்து நிலையம் குன்னூர் - பேருந்து நிலையம்

**கோவை :** மேட்டுப்பாளையம் - பேருந்து நிலையம் பெரியநாயக்கன் பாளையம் - பேருந்து நிலையம் கோவை - ஐடிஐ, வணிகவரித்துறை அலுவலகம், நெடுஞ்சாலைத்துறை அலுவலகம், சுகாதாரத்துறை அலுவலகம், கோவை வடக்கு - வட்டாட்சியர் அலுவலகம், சூலூர் - பேருந்து நிலையம்

**திருப்பூர் :** உடுமலை - நெடுஞ்சாலைத்துறை அலுவலகம், உழவர் சந்தை, அரசு மருத்துவமனை, பேருந்து நிலையம், வட்டாட்சியர் அலுவலகம், தாராபுரம் - வட்டார வளர்ச்சி அலுவலகம், காந்தி சிலை அருகே டவுன் ஹால். திருப்பூர் - மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அவிநாசி - வட்டாட்சியர் அலுவலகம் முன்பு

**ஈரோடு :** சத்தியமங்கலம் - வட்டார வளர்ச்சி அலுவலகம், நம்பியூர் - பேரூராட்சி அலுவலகம் முன்பு கோபி - வட்டாட்சியர் அலுவலகம் முன்பு, பேருந்து நிலையம் பெருந்துறை - பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் வட்டார வளர்ச்சி அலுவலகம். ஈரோடு - மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வணிகவரி அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு

**நாமக்கல் :** திருச்செங்கோடு - வட்டாட்சியர் அலுவலகம், நாமக்கல் - வட்டார வளர்ச்சி அலுவலகம், கடைவீதி

**சேலம் :** மேட்டூர் அணை - காந்தி சிலை அருகே கடைவீதி, ஓமலூர் - வட்டாட்சியர் அலுவலகம் சேலம் - மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பெத்தநாயக்கன்பாளையம் - வட்டாட்சியர் அலுவலகம், வாழப்பாடி- நெடுஞ்சாலைத்துறை அலுவலகம் முன்பு, ஆத்தூர் - பேருந்து நிலையம் அருகே (பொதுக்கூட்டம்)

**5. ஓசூர்**

***மு. பாஸ்கரன்*** *மாநில பொருளாளர்*

***ஏ. பெரியசாமி****, மாநில துணைத் தலைவர்* ***கோ.பழனியம்மாள்****, மாநில துணைத் தலைவர்*

***கிருஷ்ணகிரி :*** *ஓசூர் இரயில் நிலையம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நீதிமன்ற வளாகம், கருவூலம், தாலுக்கா அலுவலகம், வேளாண்மை உள்ளிட்ட அலுவலகங்கள்*

***தருமபுரி :*** *காரியமங்கலம் பேருந்து நிலையம், பாலக்கோடு பேருந்து நிலையம், தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம், மொரப்பூர் பேருந்து நிலையம், அரூர் பேருந்து நிலையம்*

***வேலூர் :*** *திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம், உதவிகல்வி அலுவலகம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருப்பத்தூர் பொது சுகாதாரத் துறை அலுவலகம், ஆம்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஆம்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், குடியாத்தம் சத்துணவு ஊழியர்கள் பேரணி நிறைவு - வேலூர், ஆற்காடு பேருந்து நிலையம்*

***திருவண்ணாமலை :*** *ஆரணி அண்ணாசிலை அருகில் ஆரணி, வட்டாட்சியர் அலுவலகம், பொதுப்பணித்துறை, கல்வித்துறை மற்றும் நீதித்துறை அலுவலகம், சேத்துப்பட்டு வட்டாட்சியர் அலுவலகம், போளூர் பேருந்து நிலையம், கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வேளாண்மைத்துறை அலுவலகம், ஊட்டச்சத்து அலுவலகம், திருவண்ணாமலை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பெரியகோவில் அருகில்*

***விழுப்புரம் :*** *சங்கராபுரம் கடை வீதி, கள்ளக்குறிச்சி பேருந்து நிலையம், கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம், உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம், விழுப்புரம் நீதிமன்ற அச்சகம் எதிரே*

***காஞ்சிபுரம் :*** *காஞ்சிபுரம் பேருந்து நிலையம், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேளாண்மைத்துறை அலுவலக வளாகங்கள், வாலாஜாபாத் பேருந்து நிலையம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்*

***திருவள்ளூர் :*** *மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பேருந்து நிலையம் அருகில், இரயில் நிலையம் அருகில்*

***வடசென்னை :*** *எழும்பூர், தமிழ் வளர்ச்சித்துறை, கன்னிமாரா நூலகம், ஆவண காப்பகம், ரிப்பன் மாளிகை வளாகம், புரசைவாக்கம் தாலுக்கா அலுவலகம், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், மனநல காப்பகம், சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகம், அயனாவரம், இணை ஆணையர் அலுவலகம், அரசு தொழிற்பயிற்சி பள்ளி, ஆவீவே. அம்பத்தூர் ஐடிஐ, வட்டார வளர்ச்சி அலுவலகம், வில்லிவாக்கம், சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலம், குறளகம் வளாகம், சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகம், அரசு பொது மருத்துவமனை, வில்லிவாக்கம் மருத்துவமனை வளாகம், வில்லிவாக்கம் பேருந்து நிலையம், அயனாவரம் பேருந்து நிலையம், அயனாவரம், தங்கசாலை பேருந்து நிலையம், ஸ்டான்லி மருத்துவமனை, தங்கசாலை பல் மருந்துவமனை அருகில்*

***தென்சென்னை :*** *மருத்துவத் துறை, தொ.அ.ஈ. இயக்ககம், குடும்ப நலத்துறை, தொழிலாளர் நலத்துறை, புள்ளியல் மற்றும் பொருளியல் துறை, மருந்து கட்டுப்பாடு அலுவலகம், வணிகவரி வளாகம், கல்வித்துறை இயக்கம், இந்துசமய அறநிலையத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை அலுவலகங்கள், எழிலக வளாகம், வணிகவரித்துறை, வருவாய்த்துறை, நிலஅளவைத்துறை, கருவூலக் கணக்குத்துறை,*

உள்ளாட்சி நிதி தணிக்கை, கால்நடை பராமரிப்புத்துறை, ஊரகவளர்ச்சித்துறை, வனத்துறை, சுகாதார போக்குவரத்து துறை, தொழிற்பயிற்சி நிலையம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநரகம், மின்ஆய்வுத்துறை, கிண்டி ரயில் நிலையம், சைதாப்பேட்டை ரயில் நிலையம், சைதாப்பேட்டை மார்க்கெட், பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை, பெசன்ட் நகர் தேவாலயம் அருகில், சென்னை பல்கலைக்கழக வளாகம், மெரினா கடற்கரை.

# ஓசூர் - சென்னை பயண பிரச்சார அனுபவம்

- மு.பாஸ்கரன்

**த**ஞ்சையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 13வது மாநில மாநாட்டில் சமுதாய நலன் மற்றும் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் நலன் சார்ந்த பொதுநல கோரிக்கைகளை முன்வைத்து நவம்பர் 11 முதல் 17 வரை தமிழகம் முழுவதும் 5 முனைகளில் இருந்து 5 குழுக்கள் பிரச்சாரத்தின் மூலம் ஊழியர்கள் மற்றும் மக்களை சந்திப்பது என இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொருளாளர் மு.பாஸ்கரன், மாநில துணைத் தலைவர்கள் ஏ.பெரியசாமி மற்றும் கோ.பழனியம்மாள் ஆகியோர் கொண்ட 5வது குழுவானது கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ரயில் நிலையத்திலிருந்து 11.11.2019ஆம் தேதி காலை 9 மணிக்கு பரபரப்பாக மக்கள் அலுவலகங்களுக்கும், பல்வேறு பணிகளுக்காகவும் பயணித்துக் கொண்டிருந்த ரயில் நிலையம் சந்திப்பின் அருகில்டி கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சியுடன் மிக எழுச்சியுடன் ஊழியர்-மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம் துவங்கியது.

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் மத்திய, மாநில அரசுகள் தொடர்ச்சியாக சீர்திருத்தம், சீர்திருத்தம் என மக்கள் நலனில் அக்கறை செலுத்துவதாகவும், மக்கள் நலனுக்கான அரசு என சொல்லிக் கொண்டும் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் நலனுக்கு எதிராகவும், அரசுத் துறையை தனியாருக்கு தாரை வார்க்கும் எண்ணத்தோடு மக்களிடையே பாசாங்கு காட்டி கொண்டு சமூகத்தில் மக்களுக்கும் இளைஞர்களுக்கும் எதிரான செயல்களை அமுல்படுத்துவதோடு சத்துணவு, அங்கன்வாடி, ஊர்ப்புற நூலகங்கள், ஊராட்சி செயலாளர்கள், எம்ஆர்பி செவிலியர்கள் மற்றும் பிற துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஊழியர்களின் உழைப்பை சுரண்டிக் கொண்டு இருக்கின்ற தமிழக அரசின் நயவஞ்சக செயல்பாட்டினை தோலுரித்து காட்ட நடைபெற்ற பிரச்சார இயக்கத்தின் போது எங்களுக்கு ஏராளமான அனுபவத்தை இந்த இயக்கம் தந்தது. பிரசார வாகனத்தை கடக்கின்ற பொது மக்களின் கவனத்தை ஈர்த்ததோடு, பேருந்தில் பயணம் செய்தவர்கள் மத்தியில் இந்த இயக்கம் பெரும் வரவேற்பினையும் அதேநேரத்தில் மத்திய, மாநில அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக அரசு ஊழியர் சங்கம் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது எனவும் பேசப்பட்டது.

- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிரச்சாரம் மேற்கொண்டபோது வயதான பெரியவர்கள் கூடுதலாக விளக்கம் கேட்டு தெரிந்து கொண்டதும்
- தர்மபுரி மாவட்டத்தில் பிரச்சாரத்தின் போது 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் முழுமையாக கேட்டறிந்த பின்னர் அரசின் கொள்கைகளை பகிரங்கமாக விமர்சனம் செய்கின்றீர்களே உங்களுக்கு ஏதும் பிரச்சினை வராதா என்று கேட்டதும்
- வேலூர் மாவட்டம் ஆம்பூரில் பழம் விற்பனை செய்து வந்த இரண்டு வயதான மூதாட்டிகள் எனக்கு காது கேட்கவில்லை

மீண்டும் ஒரு முறை விளக்குங்கள் என கேட்டதும், திருவண்ணாமலையில் நடைபெற்ற பிரச்சாரத்தின்போது காவலருக்கு அளித்த அரசு ஊழியர் இதழை சாலையின் நடுவிலேயே தனது பணியையும் மறந்து படித்த காட்சிகள், போளூர் பேருந்து நிலையத்தில் அமர்ந்திருந்த பயணிகள் பள்ளி முடித்து திரும்பிய மாணவ மாணவிகள் கார்ட்டூன் நிறைந்த நோட்டீசை மெய்மறந்து படித்த காட்சிகள் எங்களை மெய்சிலிர்க்க வைத்தன.

- விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி டீக்கடை அருகே நடைபெற்ற பிரச்சாரத்தில் கோரிக்கைகளை முழுமையாக கேட்டதுடன் கார்ட்டூன் நிறைந்த நோட்டீசை கேட்டு பெற்றுக் கொண்டதும், மாநில துணைத் தலைவர் விளக்கவுரையினை இளைஞர்கள் ஆர்வத்துடன் புகைப்படம் எடுத்ததும் பிரச்சாரத்திற்கு வலுசேர்த்தது.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாலாஜாபாத் பேருந்து நிலையத்தில் ஆளும் கட்சியை சார்ந்தவர்கள் முழுமையாக கேட்டறிந்தது
- திருவள்ளூர் மாவட்ட பேருந்து நிலையம் சரவண பவன் ஓட்டல் அருகில் நடந்த பிரச்சாரம் தினக்கூலிக்கு சென்று திரும்பும் தொழிலாளர்கள் மத்தியில் முழுமையாக சென்றடைந்தது.
- வடசென்னையில் அம்பத்தூர் எஸ்டேட் அருகே நடைபெற்ற பிரச்சாரத்தின்போது ஒருவர் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய பள்ளி, கல்லூரிகள் தனியார் வசமும், தனிநபர் வசம் இருக்க வேணடியதை பற்றி பேசுங்கள் என்றார்.

இக்குழு 2000 கிலோ மீட்டர் தூரம் பயணித்துள்ளன

- அனைத்து மாவட்ட நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் பட்டாசு வெடித்தும், வரவேற்பு கோசங்கள் முழக்கமிட்டும் எழுச்சியுடன் வரவேற்றனர்.
- அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம், வாலிபர் சங்கம், மாணவர் சங்கம், மாதர் சங்கம், சிஐடியு, எல்ஐசி மற்றும் பிஎஸ்என்எல் என பல்வேறு அமைப்பினர் வாழ்த்து கோஷமிட்டு இந்நிகழ்ச்சியில் வாழ்த்தி பேசி சிறப்பித்தனர்.
- 45 இடங்களில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.
- 6 தினங்களில் 5000 நோட்டீஸ் விநியோகம் செய்யப்பட்டது
- 30,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மத்தியில் பிரச்சார வாகனம் பயணித்துள்ளது.

இறுதியாக... எங்களுடன் வாகனத்தை இயங்கி வந்த ஓட்டுநர் சித்திக் பாஷாவின் வாகனத்தின் உரிமையாளர் உடனடியாக ஒரு நாள் முன்னதாக பிரச்சார பயணத்தை முடித்து வரும்படி தகவல் தந்ததும்...

நான் வேலை நிறுத்தத்தில் உள்ளேன் வேறு ஓட்டுநரை அனுப்பி வாகனத்தை கொண்ட போ என சொல்லி விடுவேன் என கூறியதும் நாங்கள் ஆச்சரியப்பட்டோம்...

இப்பிரச்சார இயக்கம் போராட்ட உணர்வை தூண்டியுள்ளதை எண்ணினோம். ❑

## கொள்கையெனும் நூலில்...

நான் வல்லூ றல்ல
இரையை கூரிய பார்வையால் கொத்திட
நான் குயிலல்ல
இனிமையாக பாட
நான் அழகிய தேன்சிட்டல்ல
பூக்களில் தேனினை உறிஞ்சிட
நான் காகமல்ல
உறவுகளை அழைத்து உண்டிட
ஆனாலும் நானும் ஒரு பறவை
சங்கமெனும் வானில்
கொள்கையெனும் நூலில் மட்டும்

- **ம.அந்தோணிசாமி**, சென்னை

# நீதித்துறையில் ஒரு புதிய நம்பிக்கை ஒளி!



“சிந்தனை மிக்க, தீவிரமான ஒரு சிறு குழுவால் வரலாற்றை மாற்ற முடியுமா? என்று எப்போதும் சந்தேகப்படாதீர்கள். உண்மையில் அதுதான் இதுவரை நடந்திருக்கிறது’’ என்ற தோழர் மார்க்கரெட் மீட் அவர்களின் வார்த்தைகள் தூத்துக்குடி நீதிமன்ற சம்பவத்திற்குப் பின் இப்போது தமிழகத்தின் அனைத்து நீதிமன்றங்களின் சுவர்களில் தடித்த எழுத்துக்களில் தெரிய ஆரம்பித்திருக்கிறது. வளைந்து நின்று நின்று கூன்விழுந்து போன முதுகுகள் கொண்ட ஒரு துறையில், உரிமை என்ற கோஷங்களுக்கும், ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக கேட்கும் குரல்களுக்கும் முதன்முறையாக ஒரு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

நீதித்துறை ஊழியர்களுக்கு, குறிப்பாக கீழமை நீதிமன்றங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சில நீதித்துறை அதிகாரிகள் இழைக்கும் அநீதிகளும், கொடுக்கும் தொல்லைகளும், அதன்காரணமாக ஊழியர்கள் அனுபவித்து வரும் இன்னல்களும், வேதனைகளும் சிந்துபாத் கதையையும் தோற்கடிக்கும் நீண்ட முடிவில்லாதவை. ஆனாலும் அவற்றையெல்லாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நீதி கேட்டு தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம் தொடர்ந்து போராடி வரும் நிலையில் கீழமை நீதிமன்றத்தில் தன்கீழ் பணிபுரியும் ஒரு பெண் ஊழியர் மீது நீதிபதி ஒருவர் நடத்திய கொடூரத் தாக்குதல் முதன்முறையாக நீதிதேவதையின் கண்களில் கட்டியிருக்கும் கருப்புத் துணியை கழற்ற வைத்திருக்கிறது.

4.11.2019 அன்று தூத்துக்குடி நீதித்துறையில் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் சுருக்கெழுத்தராக பணிபுரிந்து வந்த திருமதி.சாரதி என்ற சுருக்கெழுத்தரை, அவர், நீதிபதி கொடுத்த பணியை சரிவர தட்டச்சு செய்துகொண்டு வரவில்லை என்ற காரணத்திற்காக தன்னுடைய அலுவலக மேசையில் வைத்து எழுத பபயன்படுத்தும் எழுது பலகையைக் கொண்டு நீதிபதி தாக்கியதில் திருமதி. சாரதியின் தலையில் இடது காதுக்கு மேல் ஐந்து தையல்கள் போடக்கூடிய அளவிற்கு வெட்டுக்காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தோடியுள்ளது. ரத்தகாயம் ஏற்பட்ட ஊழியருக்கு முதலுதவி எதுவும் செய்யாமலும் அவரை மருத்துவமனைக்கு அனுப்பாமலும் அடிபட்ட பெண் தன்னுடைய வேலைகளை முடித்த பிறகே அலுவலகத்தை விட்டு வெளியே செல்ல அனுமதித்துள்ளார் தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண்.1 திரு.நிலவேஷ்வரன்.

அலுவலகத்தை விட்டு வெளியே வந்த திருமதி சாரதி சக ஊழியர்களின் அறிவுறுத்தலின்படி தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் ஆகியோரை சந்தித்து தனக்கு நேர்ந்த கொடுமையை கூறியுள்ளார். ரத்தம் சொட்டச்சொட்ட வந்து நின்ற ஊழியருக்கு உடனடி மருத்துவ சிசிக்சைக்கு ஏற்பாடு செய்யாமல் பாதிக்கப்பட்ட தோழி சாரதிக்கு ஆறுதல் வார்த்தைகள் மட்டுமே கூறி மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் செய்துள்ளனர் அவர்கள். அதேசமயம் தோழி சாரதியின் மீது தாக்கல் நடத்திய நீதிபதியின் மீது முதன்மை மாவட்ட நீதிபதி எந்த நடவடிக்கையையும் எடுக்காததோடு மட்டுமல்ல சம்பவத்தை உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்லவில்லை.

இச்செய்தி தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கத்தின் மாநில மையத்திற்கு தெரிய வந்ததும் திருச்செந்தூரில் இருக்கும் மாநிலச் செயலாளர் தோழர் இசக்கியப்பன் அவர்களை உடனடியாக தோழி சாரதி சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனைக்கு அனுப்பி அவருக்கு உதவியும், ஆறுதலும், தைரியமும் அளிக்கப்பட்டது. செய்தி காட்டுத்தீயென தமிழகத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களுக்கும் பரவி ஊழியர்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பு நிலை ஏற்பட்டு மறுநாள் 5.11.2019 மாலை 5.45 மணிக்கு அனைத்து மாவட்ட நீதிமன்ற வளாகங்களிலும் நீதிபதியின் கொடுஞ்செயலைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இதற்கிடையில் 5.11.2019ஆம் தேதி காலை நீதித்துறை ஊழியர் சங்க மாநில துணைத்தலைவர்கள் தோழர்கள் பால்ராஜ் மற்றும் மனோகரன் ஆகியோருடன் நானும் பாதிக்கப்பட்ட தோழி சாரதி அவர்களை தூத்துக்குடியில் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினோம். பிறகு அவரை அழைத்துக்கொண்டு பிற்பகலில் முதன்மை மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் ஆகியோரிடம் தோழி



*தாக்குதலுக்கு உள்ளான தோழி சாரதி*

சாரதி எழுதி வைத்திருந்த புகாரை கொடுக்க வைத்தோம். அதன்பிறகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களை நாங்கள் சந்தித்து தாக்குதல் நடத்திய நீதிபதி மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட ஊழியருக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் அது வரை இத்தகைய மனித உரிமை மீறல் தாக்குதலை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்களும் போராட்டங் களும் தொடரும் என்றும் நீதித்துறையில் பணிபுரியும் ஒவ்வொரு ஊழியருக்கும் எமது சங்கம் பாதுகாப்பு அரணாக இருந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் உறுதிபட தெரிவித்துவிட்டு வந்தோம்.

நீதிமன்ற பெண் ஊழியர் ஒருவர் அவர் பணி செய்யும் நீதிபதியால் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டதோடு, உடனடியாக உரிய முதலுதவி செய்துகொள்வதற்கு கூட அனுமதிக்காமல் அவரை அலுவலக நேரம் முடிந்த பின்பு அலுவலகத்தை விட்டு செல்ல அனுமதித்த மனித உரிமை மீறிய செயலுக்காக, அதற்கு காரணமாக இருந்த நீதிபதி நிலவேஷ்வரன் மீது உடனடியாக குற்றவியல் நடவடிக்கை மற்றும் துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் நீதிபதி நிலவேஷ்வரன் அதே இடத்தில் பொறுப்பு வகிக்கும் வரை இந்த நடவடிக்கைகள் நியாயமான முறையில் தொடர வாய்ப்பில்லாமல் போகும் என்பதால் அவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு தூத்துக்குடியிலிருந்து மாற்றப்பட்டு கண்காணிப்பு விசாரணை உள்ளிட்ட அனைத்து விசாரணைகளும் தொடங்கப்பட வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்ற பதிவாளருக்கு மாநில மையத்தின் சார்பில் புகார் அனுப்பப்பட்டது.

5.11.2019ம் தேதி மாலையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத்தலைவர் தோழர் வெங்கடேசன், தூத்துக்குடி மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள், தூத்துக்குடி மாவட்ட நீதித்துறை ஊழியர் சங்க நிர்வாகிகள் நீதித்துறை ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் தூத்துக்குடி மாவட்ட நீதித்துறை ஊழியர்கள், சி.ஐ.டி.யு.தோழர்கள் மற்றும் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தினர் ஆகியோர் புடைசூழ உணர்ச்சிபூர்வமானதொரு கண்டன ஆர்ப்பாட்டத்தை பத்திரிகை நண்பர்கள், தொலைகாட்சி நிருபர்கள் முன்னிலையில் மாநில மையம் நடத்தியது. ஊடக நேர்காணலும் பதிவிடப் பட்டது. 06.11.2019ஆம் தேதி சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் அருணாசலம் மற்றும் சென்னையில் உள்ள நீதித்துறை ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் தோழர்கள் காளிமுத்து மற்றும் மூர்த்தி ஆகியோருடனும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் தோழர் மு.அன்பரசு, மாநில துணைத் தலைவர்கள் தோழர்கள் ஞானத்தம்பி, மங்கள பாண்டியன் ஆகியோருடனும் இணைந்து உயர்நீதிமன்றத்தில் தலைமை பதிவாளரிடம் புகார் மனுவை அளித்தனர். அப்போது தலைமை பதிவாளர்' இதுபோன்ற செயல்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும், உரிய நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும்'' என்றும் அவரிடம் புகார் அளித்த தோழர்களிடம் தெரிவித்தார்.

இந்தப் பிரச்னையில் தூத்துக்குடி மாவட்டத்தின் பொறுப்பு வகிக்கும் சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதியரசர்கள் திருவாளர்கள் பாரதிதாசன் மற்றும் ஆதிகேசவலு ஆகியோரின் நேர்மையான அணுகு முறையும், வெளிப்படைத் தன்மையும் நீதித்துறை ஊழியர்களுக்கு நிச்சயம் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை அப்போதே ஏற்படுத்தியது. அதே நாளில் சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதியரசர் திரு.வினோத் கோத்தாரி அவர்கள் உயர்நீதிமன்ற மதுரைகிளையில் இருப்பதையறிந்து. நானும் மதுரையில் உள்ள மாநிலச் செயலாளர் தோழர் பிரபாகரன் மற்றும் மதுரை மாவட்ட நிர்வாகிகள் தோழர்கள் பழனிவேலு, செந்தில்குமார், அழகர்ராஜா ஆகியோரும் 7.11.2019ஆம் தேதி காலையில் நீதியரசரை சந்தித்து அவரிடமும் தூத்துக்குடி நீதிபதி

நிலவேஷ்வரனின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை விளக்கி புகார் அளித்தோம். அவரும் தூத்துக்குடி மாவட்ட முதன்மை நீதிபதியிடமிருந்து அறிக்கை பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என பொறுப்பு தலைமை நீதியரசர் உறுதியளித்தார். ஆனால் தூத்துக்குடி மாவட்ட முதன்மை நீதிபதியோ இந்த நிகழ்வை மூடிமறைக்க தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு ஊழியர்களை அச்சுறுத்தி அதுபோன்ற தொரு சம்பவம் நடக்காத வகையில் சாட்சிகளை ஜோடனை செய்ய ஆரம்பித்தார். சென்னை உயர்நீதிமன்றம் தூத்துக்குடி மாவட்ட முதன்மை நீதிபதியிடம் கேட்டிருந்த அறிக்கையை அவர் அளிக்காமல் காலதாமதம் செய்ததால் தூத்துக்குடி மாவட்ட முதன்மை நிதிபதி அதிரடியாக சேலம் தொழிலாளர் நல நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டார்.

மேலும் பாதிக்கப்பட்ட தோழி சாரதி அவர்களை சென்னைக்கு வரவழைக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு சென்னை உயர்நீதிமன்றத்திலிருது தூத்துக்குடி மாவட்ட பொறுப்பு நீதியரசர்களிடம் புகார்மனு அளிக்கப்பட்டது. புகார்மனுவை தோழி சாரதியிடமிருந்து பெற்றுக்கொண்ட நீதியரசர்கள் அவரை தனியே விசாரித்தனர். பின்னர் எங்களுடைய முறையீட்டையும் கேட்டறிந்தனர். சென்னை உயர்நீதிமன்றத்தின் கண்காணிப்பு பிரிவின் விசாரணை நடத்துவதற்கு உத்தரவிட்டிருப்பதாக வும், அந்த விசாரணை நேர்மையான முறையில் நடைபெறுவதை உறுதி செய்ய நீதித்துறையின் மாண்புக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட நீதிபதி நிலவேஷ்ரனை தற்காலிக பணிநீக்கம் செய்ய பரிந்துரைத்திருப்பதாகவும் புதிய தலைமை நீதிபதி 11.11.2019ஆம் தேதி பதவியேற்ற தும் அவரிடம் ஆணைகள் பெற அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். அதன்பிறகு புதிய தலைமை நீதிபதி பொறுப்பேற்ற பிறகு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு தூத்துக்குடி, நீதித் துறை நடுவர் எண்.1 திரு.நிலவேஷ்வரன் 13.11.2019ஆம் தேதி தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்த பிரச்சனையில் நீதித்துறை ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகளும், தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகளும், அனைத்து நீதித்துறை ஊழியர்களும், எங்களுக்கு பக்கபலமாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், சி.ஐ.டி.யு, அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் சில தோழர்களும் குறிப்பாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் தலைவர் தோழர் அன்பரசு, தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில தலைவர் தோழர் கருணாகரன் போன்றோர் உறுதியோடு நின்றதை நாங்கள் பெருமையோடு பார்க்கிறோம். ஊழியர்களின் நியாயமான கோபத்தின் வெளிப்பாட்டை சரியான முறையில் உள்வாங்கி, தவறுசெய்த நீதிபதியின் மீது நடவடிக்கைக்கு உத்தரவிட்ட தூத்துக்குடி மாவட்ட பொறுப்பு நீதியரசர்கள் திரு.பாரதிதாசன் மற்றும் திரு.ஆதிகேசவலு ஆகியோர் போற்றுதலுக் குரியவர்கள் அவர்களால் நீதித்துறை ஊழியர்களிடம் ஒரு புது நம்பிக்கை பிறந்திருக்கிறது. அதற்காக நாங்கள் அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். தவறு செய்தவர் யாராக இருந்தாலும் அவர் தண்டிக்கப்பட வேண்டும் என்ற சமநீதி கோட்பாடு நீதிபதிகளுக்கு ஒன்றாகவும் ஊழியர்களுக்கு வேறாகவும் இருக்கக்கூடாது என்ற சித்தாந்தத்திற்குக் கிடைத்த அங்கீகாரமாகவே இதை தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம் பார்க்கிறது. இதை கொண்டாடப்பட வேண்டிய வெற்றியாக நீதித்துறை ஊழியர் யாரும் நினைக்கவில்லை. அதே சமயம் நீதித்துறையில் ஒரு ஊழியருக்கு அநீதி நேர்ந்து விட்டால் அந்த அநீதியை தக்க ஆதாரங்கள் வாயிலாக உயர்நீதிமன்றத்தின் மூலம் தகர்த்தெறிய லாம் என்ற புதிய நம்பிக்கை ஒளியை இந்த சம்பவம் நீதித்துறை ஊழியர்களிடையே விதைத்திருக்கிறது.

இதுபோன்ற பல நிகழ்வுகளை, அநீதிகளை உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அவையெல்லாம் தவறிழைத்த குறிப்பிட்ட நீதிபதியின் மாவட்ட மாறுதலோடோ அல்லது சம்பந்தப்பட்ட ஊழியரின் இடமாற்றத்தோடா நின்றுபோய் வேதனை அளித்த சம்பவங்களே ஏராளம். ஆனாலும் எங்களுக்குள் ஒரு நம்பிக்கை இருந்துகொண்டே இருந்தது. ஆகப்பெரிய மாற்றங்கள் எல்லாம் அரை நாழிகையில் நிகழ்ந்தவை யல்ல. இதுபோன்ற ஒரு செயலுக்கே நீதித்துறை ஊழியர்கள் சில தலைமுறைகள் போராட வேண்டி யிருந்துள்ளதையும் நாங்கள் மறந்துவிடவில்லை. இந்த சம்பவம் இன்னொன்றையும் எங்களுக்கு உணர்த்தி ஊக்கப்படுத்தியுள்ளது. முயற்சிகளை கைவிடாதவரை யாரையும் தோல்விகள் பாதிக்காது என்பதற்கு இந்த சம்பவமே சிறந்த உதாரணம். இந்த நேரத்தில் எல்லோருக்கும் ஒன்று சொல்லிக் கொள்ளத் தோன்றுகிறது. உலகத்தில் உழைக்கும் வர்க்கத்திற்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிரான போராட்டங்களில் நீதித்துறை ஊழியர்களின் பங்கு சிறியதாக இருக்கலாம். ஆனால் அந்த சிறிய பங்களிப்பும் மதிப்பு மிக்கதாக இருக்கும், தோழி சாரதி சிந்திய ரத்தத்திற்கு கிடைத்த நியாயத்தைப் போல!

**-த.செந்தில்குமார்,**

தலைவர்,

தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்

# அமேசான் காடு - உயிர்மூச்சு

*ஆரம்பத்தில் மனிதன் இயற்கையை சார்ந்து வாழ்ந்தான்!*

*பின்னர், இயற்கையை நம்பி வாழ்ந்தான்!*

*எல்லாம் புரிந்த பின்னர், இயற்கையை வணங்கி வாழ்ந்தான்!*

*இன்று-இயற்கையை அழித்து வாழ்கிறான்!*

*மரம்தான் மறந்தான்!!*
*மனிதன் மறந்தான்...*



*பூமியின் நிலப்பரப்பில் 6 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ள, உலகத்தின் நுரையீரல் என்று வர்ணிக்கப்படும் அமேசான் காடுகள், பூவுலகின் தாவரங்கள் உயிரின வகைகளில் பாதியைக் கொண்டு, செழுமையால் நிறைந்திருக்கிறது. இதுவே உலகின் மிகப்பெரிய மழைக்காடு. அமேசான் நதியின் படுகையில் 55,00,000 சதுர கி.மீ அளவுக்குத் தென் அமெரிக்க நாடுகளில் படர்ந்திருக்கும் அமேசான் காடுகளில், 40000 தாவர இனங்கள், 1300 பறவையினங்கள், 3000 மீன் இனங்கள், 427 வகைப் பாலூட்டிகள் மற்றும் 25 இலட்சம் பூச்சியினங்கள் என மாபெரும் உயிரினப்பன்மை மையமாக அமேசான் திகழ்கிறது.*

*பிரசிலின் மிகப்பெரிய நகரமான சா பாலோ நகரத்தை, திடீரென்று பெரும் கரும்புகைப் போர்வை சூழ்ந்து மூடியது. சுமார் 1700 மைல்களுக்கு அப்பாலுள்ள அமேசான் காடுகளில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீதான், இதற்கு காரணம் அறிந்தபோதே, உலகின் மிகப்பெரிய காடு எரிந்து சாம்பலாகிக் கொண்டிருப்பதன் தீவிரத்தை உலகம் உணர்ந்தது.*

## தீவிரக் காடழிப்பு

*பிரேசிலில் 1970-களில், காடழிப்பு தீவிரப் பிரச்சனையாக உருவெடுத்தது. அப்போதிருந்து 12 சதவீத காடுகளை, பிரேசில் இழந்திருக்கிறது. இது இந்தியாவின் மொத்தப் பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு.*

*உலக வங்கியின் அறிக்கையின்படி, பிரேசிலில் அழிக்கப்பட்ட காட்டுப் பகுதியில் 80 சதவீதம், கால்நடை மேய்ச்சலுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. சுமார் 20 கோடிக் கால்நடைகளை கொண்டிருக்கும் பிரேசில், தன்னுடைய பொருளாதாரத்தில் ஆண்டுக்கு 50,000 கோடி டாலரைக் கால்நடைப் பண்ணைகளில் இருந்து பெறுகிறது. மாட்டுக்கறி ஏற்றுமதியில், முன்னணியில் இருக்கும் இந்த நாடு, உலகத்தேவையில் 20 சதவீதத்தை நிறைவுசெய்கிறது.*

## அமேசான் மழைக்காடுகள்- ஓர் அதிசயம்

*புவியின் மிகப் பழமையான சூழலியல் அமைப்புகளுள் ஒன்று மழைக்காடுகள். இவற்றில் பெரும்பாலானவை 7 ஆண்டுகள் பழமையானவை. ஆண்டுக்கு 1750 மில்லி மீட்டரில் இருந்து 2000 மி.மீ வரை மழைப்பொழிவைப் பெறும் இவை, நம்பமுடியாத பன்முகத்தன்மையையும், சிக்கலான அமைப்பையும் கொண்டவை.*

*10 சதுர கி.மீ பரப்பில் மட்டும், 1500 வகையான பூக்கும் தாவரங்கள், 750 வகையான மரங்கள், 400 பறவையினங்கள் மற்றும் 150 வண்ணத்துப் பூச்சி வகைகள் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.*

*அமேசான் காட்டுத்தீ உலகின் கவனத்தை ஈர்த்திருக்கும் அதே வேளையில், பிரேசிலின் அண்டை நாடான பொலிவியா, காங்கோ, சைபீரியாவின் ஆர்டிக் பகுதி காடுகளிலும் காட்டுத் தீ பற்றியெரிந்துகொண்டுதான்*

இருக்கிறது. அதேபோல இந்தியா, இந்தோனேசியா, கொலம்பியா, ஐவரி கோஸ்ட், கானா, ஐரோப்பாவின் சில பகுதிகளில் காடழிப்பும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

## வளர்ச்சிக் காட்டுத்தீ-கார்ப்பரேட்களின் பங்கு

அமேசான் காடுகளில் 60 சதவீதத்தைக் கொண்டுள்ள பிரேசிலில், ஜுலை முதல் அக்டோபர் வரை, வறட்சியான காலம் ஆகும். இந்தக் காலத்தில் காட்டுத்தீ பரவுவது இயல்பாக இருந்தாலும், காடழிப்பின் ஒரு பகுதியாக, காட்டுக்குத் தீ வைப்பது, அந்நாட்டு விவசாயிகளிடையே வழக்கம். வேளாண்மை மற்றும் கால்நடை மேய்ச்சலுக்கான இந்த சட்டவிரோத நடவடிக்கையில், பெரு நிறுவனங்களின் பங்கு கணிசமானது.

இந்த ஆண்டு தொடக்கம் முதல் ஆகஸ்ட் 23 வரையிலான காலத்தில் மட்டும், பிரேசிலில் 75,336 இடங்களில் காட்டுத்தீ பரவி யிருப்பதாகவும் இது வரையிலான பதிவுகளில், இதுவே உச்சம் எனவும், பிரேசிலின் தேசிய விண்வெளி ஆராய்ச்சி மையம் தெரிவிக்கிறது.

வளர்ச்சி என்ற பெயரில், பிரேசில் அரசு மேற்கொண்டுவரும் செயல்பாடுகளால், தற்போது எரிந்துகொண்டிருக்கும் காட்டுத்தீ, பிரேசிலுக்கு மட்டும் பிரச்சினையை ஏற்படுத்தவில்லை, ஒட்டுமொத்த மனிதகுலத் துக்கும், புவியின் சூழலியலுக்கும், பேராபத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கும் காட்டுத்தீ அமேசானில் தற்காலிக விளைவுகளை மட்டுமல்லாமல், நீண்ட காலத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

## பருவநிலை மாற்றத்துக்கான அடிக்கோல்

புவி வெப்பமயமாதலுக்கான முதன்மைக் காரணிகளுள் ஒன்று கரியமில வாயு வெளியேற்றம். அந்த வாயுவைப் பேரளவில் கிரகிக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கும் அமேசான் காடு, தற்போதைய பேரழிவால் தன் முழு கிரகிக்கும் திறனை இழக்கும். அது மட்டுமல்லாமல் கட்டுப்படுத்தவே முடியாத அளவுக்குப் பற்றியெரியும் மரங்கள், கரியமில வாயுவை வெளியேற்றிப் பருவநிலை மாற்றத்துக்குப் பங்களிக்கவும் செய்யும்.

காட்டுத்தீயால் அழிந்த மழைக்காடுகளில், மண்வளம் முற்றிலும் சேதமடைந்து, மீண்டும் துளிர்ப்பதற்கு வழியில்லாமல் போவது அதிகரித்திருக்கிறது. ஒருவேளை காட்டுத்தீயும், காடழிப்பும் அமேசானில் முற்றிலுமாக நிறுத்தப்பட்டாலும்கூட அந்தக் காடு பழையபடி மீண்டும் வளர்வதற்கு 20 ஆண்டுகள்-முதல் 40 ஆண்டுகள் வரை ஆகும்.

## ஆட்சியாளர்களின் பங்கு

அமேசான் இன்று பற்றியெரிந்து கொண்டிருப்பதற்கு அந்நாட்டின் அரசியல் தலைமையும் ஒரு முக்கியக் காரணம். பிரேசிலின் புதிய அதிபராக இந்த ஆண்டு (2019) ஜனவரி மாதம் ஜெய்ர் போல்சோனாரு பொறுப்பேற்றார். சூழலியல் விரோதப் போக்கைத் தீவிரமாக கடைப்பிடித்து வரும் இவர் ஆட்சிப்பொறுப்பேற்ற சில மணி நேரத்திலேயே, வனக்கொள்கையை, வேளாண் அமைச்சகத்தின்கீழ் கொண்டுவந்து, அமேசான் அழிக்கப்படுவதற்கான தொடக்கப்புள்ளியை வைத்தார்.

அமேசான் காட்டுத்தீ குறித்த செய்திகள் உலகைக் கலங்கடித்துக்கொண்டிருந்த நேரத்தில், இது எதையும் பொருட்படுத்தாமல், ‘ஸ்டாண்ட்-அப் காமெடி’ நிகழ்ச்சியொன்றில் சிரித்துக்கொண்டிருந்தார் போல்சோனரு. மறுபுறம் சமீபத்தில் கூடிய ஜி7 நாடுகளின் கூட்டமைப்பு, அமேசான் காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த, 20 மில்லியன் டாலர் நிதியுதவியை பிரேசிலுக்கு வழங்க முன்வந்த போது, அந்தத் தொகையைப் பெற, வன்மை யாக அவர் மறுத்தார். அரசியல் தலைமைகளின்

> “வளர்ச்சிக்குத்தான் முதலிடம், அதற்காக தேவைப்படும் அளவுக்குக் காட்டை நியாயமான அளவில் அழித்துக் கொள்ளலாம்.”
>
> - பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சோனாரு

சூழலியல் அக்கறையின்மைக்கு போவ்சோனரு சிறந்த எடுத்துக்காட்டு.

### நிறைவாக

தோட்டத்தை அழித்துவிட்டு,
தொட்டியில் செடி வைக்க பழகி விட்டோம்
குளத்தை வற்றவைத்து விட்டு,
புட்டியில் மீன்வளர்க்க பழகிவிட்டோம்
வளமான காட்டை அழித்துவிட்டு,
Mobilr, Wallpaper- அதை வரைந்து ரசிக்க பழகிவிட்டோம்.
வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்.
என்று சொன்ன - வள்ளலாரை மறந்துவிட்டு,
பயிர் நிலத்தை அழித்துவிட்டு,
வள்ளலார் Apartments என்று பெயர் வைக்க பழகிவிட்டோம்.

சாலைகளிலும், பயணங்களிலும் திரும்பு வதற்கு ஒருவழி இருப்பதுபோல, இயற்கை வள அழிப்பில் திரும்பிப் பழைய நிலைக்குப் போவதற்கான சாத்தியம், மிக மிக அரிது.

ஏற்கனவே தற்போதைய காட்டழிப்பு விகிதம் தொடருமானால், 2030-க்குள் 27 சதவீதம் வனப்பரப்பை அமேசான் இழந்துவிடும் என்று எச்சரித்திருந்தது, ஐநாவின் உலக இயற்கை நிதியம்.

இயற்கையில் எதையும் பிரிக்க முடியாது, எங்கோ ஏற்படும் சிறு சலனம்கூட, இன்னொரு மூலையில் ஒரு பாதிப்பையோ, தாக்கத்தையோ ஏற்படுத்தும். உலகிலுள்ள ஆக்ஸிஜனில் 20 சதவீதம் இந்தக் காடுகளால் உற்பத்தி செய்கின்ற, அமேசான் காடுகளின் அழிப்பும், அப்படித்தான்.

அமேசான் காட்டுத்தீ, ஒரு தீ அல்ல, நம்முடைய சுயநலமும், பேராசையும், அக்கறையின்மையுமே காடுகளை அழிக்கும் முதன்மைத்தீ. எந்த வகையிலும், அமேசான் காடுகளின் இழப்பை, மனித குலத்தால் ஈடுசெய்ய முடியாது என்றால் அது மிகையாகாது.

- லூ.ஜோ சில்வஸ்டர்

# காணாமல்போன ஆடும் பஞ்சாயத்தும்

அன்று அந்த ஊர் பஞ்சாயத்துக்கு ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது...

**ஆட்டை இழந்தவர்** : ஐயா எனது ஆட்டை ஆட்டைய போட்டாங்க எஜமான்... ஐயாக்கள் பெரிய மனது பண்ணி அதை திரும்ப பெற்றுக் கொடுக்க வேணும்..

**ஆட்டை திருடிய தரப்பு**: இந்த ஆண்டு எங்கள் முப்பாட்டன் காலத்தில் எங்களுக்கு சொந்தமாக இருந்தது.. எனவே இது எங்கள் உடமை..

**பஞ்சாயத்தார் ஆடு இழந்தவரிடம்** : இந்த ஆடு உங்களுக்கு சொந்தமானது என்பதற்கு ஏதாவது ஆதாரம், இரசீது, ருசு இருக்கிறதா..

**ஆட்டை இழந்தவர்**: ஐயா நாங்கள் பரம்பரை பரம்பரையாக ஆடு மேய்க்கும் ஆயர் கூட்டம். எங்கள் தகப்பனார் ஆடு வளர்த்தார். தகப்பனாரின் தகப்பனார் ஆடு வளர்த்தார், அவரின் தகப்பனார் ஆடு வளர்ப்பு பணி செய்தார். இப்படியாக வழி வழியாக இதை செய்து வருகிறோம். எனவே எங்கள் ஆடு தற்சமயம் யாரிடமும் வாங்காத நிலையில் இரசீது ஏதுமில்லை பஞ்சாயத்தாருக்கு தெரியாது ஏதுமில்லை. இது குலத்தொழில்...

**பஞ்சாயத்தார்**: ஆட்டை திருடியது தவறு என்று இப்பஞ்சாயத்து முடிவு செய்கிறது... ஆனாலும் ஆட்டை இழந்தாக புகார் தந்தவர் தனது ஆடு தான் என்பதை ஐயமற நிரூபிக்க தவறியதாலும் இரசீது ஏதுமில்லை என்பதாலும், தற்போது ஆட்டை வைத்திருப்பவர் ஆட்டை வைத்துக் கொள்வது எனவும், ஆடு குட்டி போட்டால் ஒரு குட்டியை ஆட்டை இழந்தவருக்கு வழங்கிட வேண்டுமெனவும் ஒருவேளை ஆட்டை அறுத்து கறி போட்டால் தோலையும் குடலையும் அவருக்கு வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கிறது...

**ஆட்டைஇழந்தவர்**: நல்ல வேளை எல்லா திருடனும் சேர்ந்து ஆட்டை முழுங்கிரு வானுங்கனு நினைச்சேன்... தோலும் குடலும் கிடைத்தது... திருட்டு போனது போனது தான் அவன் பெருங்கூட்டம். அதில் நாம் திருட்டு புகார் கொடுத்தால் அதற்கு ஐந்து ஆடு அபராதம் என்று சொல்லிருவாங்களோனு பயந்தே போயிட்டேன்...? பரவாயில்லை பஞ்சாயத்தார் ஓரளவு நல்ல தீர்வு தான் சொல்றாங்க.....

- முனைவர் மதுரை சுகி

# தனியார்மயமாகும் வருவாய்த்துறை

மக்களின் வாழ்வோடும் அன்றாட நடைமுறைகளோடும் இரண்டறக் கலந்த துறை வருவாய்த்துறை. வெள்ளம், புயல், வறட்சி, இயற்கைச் சீற்றங்கள், தேர்தல், சான்றுகள் வழங்குதல், நிர்வாகம் செய்தல்டி எனப் பன்முகத் தன்மையோடு அரசின் நிர்வாகத் துறையாகவும விளங்கி வருகிறது. சட்டம்-ஒழுங்கு பாதுகாப்பதன் மூலமும், வருவாய்த் துறை அலுவலர்கள் இரண்டாம் வகுப்பு நிர்வாக நடுவர்களாகவும் (வட்டாட்சியர்கள்), உட்கோட்ட நிர்வாக நடுவர்களாகவும் (வருவாய் கோட்ட அலுவலர்) கூடுதல் மாவட்ட நிர்வாக நீதிபதிகளாவும் (மாவட்ட வருவாய் அலுவலர்) பணிபுரிவதன் மூலம் நீதித்துறை பணிகளையும் சேர்த்தே பார்த்து வருகின்றனர்.

நில நிர்வாகம், நில ஆவணங்களை பராமரித்தல், கனிம வளங்கயை பாதுகாத்தல், அரசின் பல்வேறு துறைகளிலும் நிர்வாகம் செய்யும் பணிகளில் ஈடுபடுதல் என வருவாய்த் துறையின் பணி விரிவடைகிறது.

இத்தகைய சிறப்புமிக்க துறையை அரசின் நிர்வாகத்தின் முதுகெலும்பு எனவும், தலைமையான துறை எனவும் முன்னாள் முதல்வர்கள் போற்றி சிறப்பித்துள்ளனர்.

ஆனால் இத்தகைய சிறப்புமிக்க வருவாய்த் துறையில் அலுவலக உதவியாளர், கிராம உதவியாளர் என்ற அடிப்படை நிலையிலிருந்து மாவட்ட வருவாய் அலுவலர் என்ற உயர் நிலை வரை ஆயிரக்கணக்கான பணியிடங்கள் காலியாக உள்ளன. இன்றைக்கு மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் நிர்வாக வசதிக்காக பிரிக்கப்படும்போது ஒப்பளிக்கப்பட்ட அளவிலான பணியிடங்கள் நிரப்பப்படுவதில்லை. மேலும் பணி ஓய்வு, பதவி உயர்வு, இறப்பு போன்ற நிகழ்வுகளால் ஏற்படும் காலிப் பணியிடங்கள் ஆண்டு தோறும் நிரப்பப்படுவது இல்லை. எனவே ஒரு அலுவலர் பல இருக்கைக்கான பணிகளையும், ஒரு களப்பணியாளர் பல களப் பணியாளர்களின் பணிகளையும் சேர்த்து கூடுதலாக பார்க்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

பல வட்டங்களில் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் நிர்வாகப் பணியினையும், மண்டல துணை வட்டாட்சியருக்கான களப்பணிகளையும், தேர்தல் துணை வட்டாட்சியரின் பணிகளையும் பார்க்கும் நிலை உள்ளது.

இதனால் இயல்பாகவே ஊழியர்கள் கடுமையான மன உளைச்சலுக்கும், மன அழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர். பணிப்பளு அதிகமாவதால் மக்கள் சேவையிலும் தாமதம் ஏற்படுகிறது. எனவே மக்களுக்கு சிறப்பான உடனடி சேவை செய்திட வருவாய்த் துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்ப தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம். மேலும் பதவி உயர்வுக்கான உத்தரவுகளை உரிய காலத்தில் வழங்கினால் ஊழியர்களின் பதவி உயர்வும், அந்த பணியிடங்களை ஆண்டு தோறும் நிரப்பிடவும் வாய்ப்பாக இருக்கும்.

வருவாய்த்துறை தோன்றிய காலம் முதல் சான்றிதழ் வழங்கும் பணி என்பது சேவையாக இருந்தது. ஆனால் 20க்கும் மேற்பட்ட சான்றுகள் இணைய வழியாக வழங்க அரசு உத்தரவிட்டன் பின்பாக ஒவ்வொரு சான்றிதழுக்கும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு பொதுமக்களிடமிருந்து கட்டணம் வசூலித்த பின்பே சான்றிதழ் பதிவேற்றம் செய்யப் படுகின்றன. ஏதாவது காரணத்திற்காகவோ ஆவணங்கள் கோருவதற்காகவே மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டால் அதே மனுதாரர் அதே சான்றுக்காக மீண்டும் கட்டணம் செலுத்தி மனு செய்ய வேண்டியுள்ளது. இதனால் இரட்டிப்பு செலவு, காலதாமதம் மற்றும் அலுவலர்களை சந்தித்து தங்களின் குறைகளை தெரிவிக்க முடியாமை போன்ற சிரமங்களை பொதுமக்கள் அனுபவிக்கின்றனர்.

மேலும் கணினிவழிச் சான்றிதழ் வழங்குதல் என்பதன் மூலம் தனியார்மயம் வருவாய்த் துறையில் புகுத்தப்பட்டுள்ளது.

இதேபோல் பட்டா மாறுதல் மனுக்களை பொறுத்தவரையில் முழுப்புலங்களுக்கான பட்டா மாறுதல், உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் என இரண்டு வகை உள்ளன. இம்மனுக்கள் மனுதாரரால் கணினி சேவை மையம் மூலமாகவும், சார் பதிவாளர் அலுவலங்களில் இருந்தும் வட்ட அலுவலகத்திற்கு வருகின்றன.

முழுப்புலங்களை பட்டா மாறுதல் செய்வது என்பது ஆவணங்களின் அடிப்படையில் நடைபெறுவதால் அலுவலகங்களிலேயே நடைபெறுகிறது. ஆனால் உட்பிரிவு பட்டா மாறுதல் என்பது உள்வட்ட நில அளவர்களால் சம்பந்தப்பட்ட புலத்தினை அளந்து, உட்பிரிவு ஆவணங்களை தயார் செய்து அலுவலக தணிக்கைக்கு உட்படுத்தி அளவுகள் சரிபார்க்கப்பட்டு பின் வட்டாட்சியர்கள் ஒப்புதல் அளித்த பின் பொதுமக்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தமிழகம் எங்கும் நிலஅளவர் நிலையில் சுமார் 2 ஆயிரம் பணியிடங்கள் காலியாக உள்ளன. ஒரு வட்ட நில அளவரே இரண்டு, மூன்று உள்வட்டங்களையும் சேர்த்துப் பார்க்கும் நிலையும் உள்ளது. மேலும் இதே உள்வட்ட நில அளவர் தான் வட்ட அலுவலகத்தின் இதர பணிகளான ஆக்கிரமிப்பு களை அளவீடு செய்தல், வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியான நிலங்களை அளத்தல், நீதிமன்ற கமிஷன்கள் மூலம் நடைபெறும் நில அளவை பணிகள் செய்தல், குடிமராமத்துப் பணிக்காக நீர்நிலைகளை போன்ற பல்வேறு பணிகளையும் சேர்த்து பார்க்கின்றனர்.

எனவே ஆள்பற்றாக்குறையாலும், பிற பணிகளையும் சேர்த்து பார்ப்பதாலும், நேரமின்மையாலும் உட்பிரிவு பட்டா மாறுதல் மனுக்கள் நிலுவை ஏற்படுவது தவிர்க்க இயலாதகி விட்டது. இதை காரணம் காட்டி அரசாணையின் 362 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 4,10.2019-ன் மூலம் ரூபாய் 20000 தொகுப்பூதியத்தில் "உரிமம் பெற்ற நில அலுவலர்" (Licenses Surveyor) அனுமதி வழங்கி உள்ளது. இதற்கு முன்பாக புல உதவியாளர் (Field Assistant) பணியிடங்கள் நிரந்தர ஊழியர்களை கொண்டு நிரப்பாமல், தனியார் வெளிமுகமை மூலம் (Private Out-standing) 433 பணியிடங்களை நிரப்பிர அரசாணை எண். 2 (2டி) நாள் 5.1.2018 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மூலம் உத்தரவிட்டுள்ளது.

மக்களோடும் நிலத்தோடும் தொடர்புடைய வருவாய் துறை, நிலஅளவைத் துறை பணியிடங்களை தனியாருக்கு தாரை வார்ப்பதும், தொகுப்பூதிய பணியாளர்களை நியமிப்பதும் எதிர்காலத்தில் வருவாய்த் துறையின் ஆவணங்களை பாதுகாக்க முடியாத நிலையினை ஏற்படுத்தும். மக்களுக்கான சேவை முழுதும் கட்டணம் செலுத்தினால் மட்டுமே கிடைக்கும் என்ற நிலையினை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும். ஏதேனும் தவறுகள் நேரிட்டால் தனியார் நிறுவன ஊழியர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க இயலாது என்ற நிலையும், ஆவண பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகிடும் என்ற அபாயமும் உள்ளது.

தற்போதுள்ள இட ஒதுக்கீட்டு முறையினை முற்றிலும் தவிர்க்கும் நிலையினையும் தற்போதுள்ள ஊழியர்களின் பணிப் பாதுகாப்பு, பதவி உயர்வு என்பது இனி இல்லை என்ற நிலையினையும் உருவாக்கும்.

எனவே தமிழக அரசு வருவாய் துறையில் தனியார்மயமாக்கும் நிகழ்வுகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் எனவும், இல்லையென்றால் வருவாய்த் துறையில் உள்ள அனைத்து அமைப்பினரும் இணைந்து கூட்டமைப்பு ஏற்படுத்தி போராட வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் தமிழக அரசிற்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- **மங்கள பாண்டியன்**

# கூடிய விரைவில் எங்கள் நியாயங்களுக்காக நீங்கள் பரிந்து பேசுவீர்கள் பாருங்கள்!

இப்போதிருக்கும் ஆளும் அதிமுக அரசாங்கம் அரசு ஊழியர்களை தன்னுடைய உறுப்பாக பார்க்காமல் அந்நியப் பொருளாக பார்ப்பதையே அதன் பார்வை உணர்த்துகிறது. அரசு ஊழியர்களை நண்பர்களாக பார்க்காமல் எதிரிகளாகப் பார்க்கும் மனோபாவம் அம்மா மறைந்து எடப்பாடி முதல்வரான பின் கொஞ்சம் தூக்கலாகவே தெரிகிறது. சென்ற ஆண்டு அதிமுக பொதுக்குழுவில் பேசிய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி ‘ஒண்ணாங் கிளாஸுக்கு பாடம் எடுக்கற வாத்தியான் ரூ.50000/- சம்பளத்தை வாங்கிகிட்டு சம்பளம் பத்தலைன்னு போராடுறான்’னு ஏக வசனத்தில் அர்ச்சனை மழை பொழிந்தார். அவரே இந்த ஆண்டு நடந்த அதிமுக பொதுக்குழு கூட்டத்தில் திமுக தலைவர் ஸ்டாலின் அரசு ஊழியர்களை போராடச் சொல்லி துாண்டி விடுகிறார் என்றும், அரசு ஊழியர்கள் திமுகவுக்கு ஆதரவாக செயல்படக்கூடியவர்கள் என்றும் அவர்கள்தான் வாக்குப்பெட்டிகளில் திமுக-விற்கு ஆதரவாக ஓட்டு விழ உதவுகின்றனர் என்றும் வசைபொழிவு ஆற்றியிருக்கிறார்.

இன்னொரு அமைச்சர் இராஜேந்திர பாலாஜி “அரசாங்கத்தின் பெரும்பகுதி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு சம்பளமா போவுது, பென்சனா போவுது, போனஸா போவுது’’ங்கிறார். இருக்கற சொற்ப தொகையை வெச்சுக்கிட்டுதான் சமூகநல திட்டங்களை நடத்த வேண்டியிருக்குதாம். அரசின் வருவாயில் அரசு ஊழியர்களின் சம்பளத்திற்காக பெரும்பகுதியை செலவிடுவதாக கூறும் அமைச்சர், அரசு ஊழியர்களின் சம்பள செலவினத்தில் முதல்வர் முதல் எம்எல்ஏ வரையிலானவங்க வாங்கும் சம்பளம், கார்படி, பெட்ரோல்படி, பல இடங்களுக்கு சென்றுவர ஆகும் செலவு போன்ற எல்லாமும் சேர்ந்தது தான் என்பதை ஏன் சொல்லாமல் மறைத்துவிட்டார் என்று தெரியவில்லை. இப்படி நீங்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை குறை சொல்வதாக இருந்தால் முதலமைச்சர் மற்ற அமைச்சர்கள் எம்.எல்.ஏக்கள் ஆகியோரின் சம்பளங்கள் மற்றும் இதர செலவினங்களை கழித்துவிட்டு சொல்ல வேண்டியது தானே. நீங்கள் செய்யும் தண்டச் செலவினங்களை அரசு ஊழியர்களின் சம்பளச் செலவினங்களில் சேர்ப்பது ஏன்? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. ஒண்ணாங்கிளாஸுக்கு பாடம் நடத்துற ஆசிரியர் வாங்கற சம்பளம் 50000/- ரூபாய் மட்டும்தான். ஆனால் ஒன்றுமே செய்யாத எம்.எல்.ஏ.க்களுக்கு ஏன் ரூ.1,20,000/- சம்பளம்? உண்மையிலயே அரசு ஊழியர்களுக்காக இந்த அரசாங்கம் சம்பளம் மற்றும் செலவினங்களாக போட்டிருக்கற பட்டிலில் எம்.எல்.ஏக்கள், அமைச்சர்கள் முதலமைச்சர் உள்ளிட்டவர்களுக்கு ஆன செலவினங்களை பிரிச்சு சொல்லுங்க அரசு ஊழியர்கள் தனியா பொது ஊழியர்கள் தனியா கணக்கு போட்டு உங்கள் 324 பேருக்கு என்ன செலவு? எங்க 10 லட்சம் பேருக்கு என்ன செலவுன்னு பட்டியல் போடுங்க. அரசு ஊழியர்களுக்கான சம்பளச் செலவினங்களில் முதல்வரும் அமைச்சர்களும் செய்யும் அனைத்துச் செலவினங்களையும் ஏன் சேர்க்கிறீர்க? என்னமோ எம்.எல்.ஏ.க்களும் அமைச்சர்களும் என்ன சம்பளம் வாங்காம இலவசமாக நாட்டுக்கு சேவை செய்யறவங்களைப் போலவும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மக்கள் வரிப்பணத்தை உறிஞ்சி குடிக்கறவங்க போலவும் இந்த அமைச்சர் பேட்டி கொடுக்கிறார்.

அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் சம்பளம் கேட்டு போராடினாலும் அதுக்கு ஒரு அர்த்தம் இருக்கு. அவங்க எல்லாரும் அலுவலகத்துக்கு பள்ளிகளுக்கு போய் வேலை பாக்கறாங்க. ஆனா இந்த எம்.எல்.ஏ.க்களும், அமைச்சர்களும் என்னத்தை கிழிக்கிறாங்க. வருஷத்துல 35 முதல் 40 நாள் நடக்கற சட்டசபைக்காக இவங்களுக்கு மாசம் தோறும் எதுக்கு ரூ.120000/- சம்பளம்? 234 எம்எல்ஏக்களுக்கு வழங்கப்படும் இந்த தண்டச்சம்பளத்தை அரசு ஊழியர்களுக்கு ஆகும் செலவினங்களில் ஏன் சேர்க்கிறீர்க? தனியாக காட்டுங்க? மக்கள் வரிப்பணத்தை யார் சூறையாடுகிறார்கள் என்று தெரியும். தொகுதி பக்கமும் போவறது கிடையாது. மக்களுக்காக எதுவும் செய்யறது கிடையாது. தொகுதி மக்கள் ஏதாவது உதவி கேட்டு போனால் அதற்கும் லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கு. ஒரு உதவிக்காக எம்.எல்.ஏ.அமைச்சர்களை பார்க்க பத்து இருபது முறை அலைய வேண்டியிருக்கு.

58 வயசு வரைக்கும் அரசாங்க வேலையில இருக்கற அரசு ஊழியன் சுமார் 28 முதல் 33 வருடங்கள் வேலை பார்த்துட்டு ஓய்வூதியம் கேட்டு போராடுறது நியாயமில்லையாம். ஏழைகள் எல்லாம் அடுத்த வேளை சோத்துக்கே அல்லாடும் போது அரசு ஊழியர்கள் போராடுகிறார்கள் என்று பேட்டி கொடுக்கிறார் அமைச்சர். உண்மையில் அந்த உணர்வு உங்களுக்கு இருக்கும்னா ஒரு தடவை

எம்.எல்.ஏ.வாக இருந்துவிட்டாலே அவரு இறக்கிற வரைக்கும் மாசம் ரூ.20000/-ஐ பென்சனா கொடுக்கறதை நிறுத்துங்க முதல்ல. ரூ.45000/- ஆக இருந்த சம்பளத்தை ரூ.1,20,000/- ஆக நீங்களே உயர்த்திகிட்டப்ப அடுத்த வேளைக்கு அல்லாடும் ஏழைகளும் பாழைகளும் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? அரசு ஊழியரோ ஆசிரியரோ ஒரு 30 வருட காலம் நன்னடத்தை விதிகளுக்கு உட்பட்டு அரசாங்க உத்தியோகம் பார்த்துட்டு தங்களின் ஓய்வு வயதுக்குப்பிறகு வாழறதுக்கு ஓய்வூதியம் கேட்கறதுல ஒரு நியாயம் இருக்கு. ஆனால் அரசியல் என்கிற தொழிலில் எம்.எல்.ஏ.வாக அமைச்சராக ஆகி சம்பாதிக்க வரும் இந்த அரசியல்வாதிகளுக்கு ஏன் ஓய்வூதியம்? உங்களை யார் கேக்கறது? இந்த அநியாய செலவுகளை எல்லாம் அரசு ஊழியர்கள் சம்பளச் செலவினங்களில் சேர்த்துகிட்டு 85 சதவீதம் 95 சதவீதம்னு கணக்கு காட்டினா அதை மக்கள் நம்பிவிடுவார்களா?

அமைச்சர், முதலமைச்சர்,எம்எல்ஏ-க்கள் கார்ல போறதுக்கு வர்றதுக்கு அவங்களுக்கு முன்னாடி எட்டுக்காரு பின்னாடி எட்டுகாரு அதுக்கு 16 டிரைவரு, 10 அலுவலக உதவியாளர்கள்னு யார் போடச்சொன்னாங்க? அவங்களை எல்லாம் எடுத்துட்டு ஒரே கார்ல ஒரே டிரைவரு போட்டுக்க வேண்டியது தானே. இவங்க காட்டற வெட்டி பந்தாவுக்கு ஆகிற செலவுகள் எல்லாத்தையும் அரசு ஊழியர்கள் ஊதியக் கணக்கில் ஏன் சேர்க்கிறீர்கள்? அரசு கருவூலத்தின் பெரும்பகுதியை அரசு ஊழியர்களுக்காக செலவிடப்படுகிறது என்கிற புளுகு மூட்டையை இனிமேலாவது அமைச்சர்கள் சொல்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

மக்கள் வரிப்பணம் வீணாவதாக முதலைக் கண்ணீர் விடும் அமைச்சரும் முதல்வரும் முதலில் தங்கள் செலவினங்களை குறைத்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருந்து காட்ட வேண்டும். முதல்வர் ஏர்போர்ட் போனா, வந்தா, கவர்னரைப் பார்க்கப் போனால் 10 அல்லது 20 அரசுக்கார்கள் புடைசூழப் போவதும் வருவதும் முதல்வர் ஏர்போர்ட் முதல் எங்கு போனாலும் ஆயிரக்கணக்கான போலீஸ்காரங்களை ரோட்டுல நிக்க வச்சு மனித உழைப்பை வீணடிக்கிற தும் அனாவசிய வேலையாத் தெரியலையா உங்களுக்கு? உங்களுக்கு சேவகம் செய்ய போலீஸ்காரர்கள் தெருவில் நிற்கறதாலதான் வீட்டுல புகுந்து திருடர்கள் கத்தியைக்காட்டி ஜாலியா திருடிகிட்டு போறாங்க. கவர்னருக்கு முதல்வருக்கு ரூட்போட்டு பத்தடிக்கு ஒரு போலீசை நிக்க வக்கறது எந்த சமூகதிட்டத்துல வருது அமைச்சரே. அது அரசாங்கப்பணத்தை வீணடிக்கற தில்லையா. அரசாங்க காரு, பங்களா, காருக்கு பெட்ரோல் இதெல்லாம் யார் பாட்டன் வீட்டு காசு. அந்தப்பணத்தையெல்லாம் நீங்க வீணடித்துக் கொண்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களால்தான் கஜானா காலியா போயிட்டுதுன்னு சொல்றது என்ன ஒரு அயோக்கியத்தனம்?

கடந்த இருபது ஆண்டுகளில் தமிழகத்தை ஆட்சி செய்த கட்சிகளில் ஊழல் குற்றத்துக்கே ஆளாகாத மந்திரி முதல்வர்னு எத்தனை பேரை அமைச்சர் ராஜேந்திர பாலாஜியால சொல்ல முடியும்? ஒண்ணுமில்லாம சென்னைக்கு வந்துட்டு இன்னிக்கு 1000 கோடி 2000 கோடின்னு பணத்தை சேர்த்து வச்சிருக்கிற அரசியல்வாதிங்கள் அவங்க எந்த கட்சியை சேர்ந்தவங்களா இருந்தாலும் சரி, எத்தனை பேரு? ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி சைக்கிளில் கூட போக முடியாதவன் இன்னிக்கு ஸ்கார்பியோ காரில் வெள்ளையும் ஜொள்ளையுமாக போவறது யாருடைய காசு? இவ்வளவு குறுகிய காலத்துல உங்களால மட்டும் எப்படி கோடி கோடியா சேர்க்க முடியுது. அது யாரோட பணம். உங்களில் எத்தனை பேரு வருமான கணக்கு காட்டியிருக்கீங்க? எத்தனை பேரு நேர்மையா வருமான வரி கட்டியிருக்கீங்க? மக்கள் திட்டங்கள்னு பலதிட்டங்கள் போட்டு அதுல ஊழல் செய்யறதும் கொள்ளை அடிக்கறதும்தான் உங்கள் திட்டம் என்றால் நீங்கள் செய்யறது தான் மக்கள் சேவையா?

ஊழலும் செஞ்சுட்டு, கொள்ளையும் அடிச்சுட்டு, ஜெயிலுக்கும் போயிட்டு, சம்பளமும் வாங்கிக்கிட்டு, பென்ஷனும் வாங்கிக்கிட்டு அரசாங்க கஜானாவை சுரண்டி சுரண்டி ஓட்டை போட்டுட்ட அமைச்சர்களும் முதல்வரும் அரசு ஊழியர்கள் வேலையே செய்யறதில்லை, அவங்களுக்கு கொடுக்கறதே தண்டச்சம்பளம்னு ஏக வசனம் பேசறதும், அடுத்த வேளை சோத்துக்கே வழியில்லாம இருக்கற ஏழைகள் இருக்கற இந்த நாட்டுல அதிக சம்பளம் கேட்டு போராடலாமான்னு கேக்கறதும் சாத்தான் வேதம் ஓதுகிற மாதிரியல்லவா இருக்கிறது. அடுத்த வேளை சோத்துக்காக இந்த நாட்டு மக்களை கையேந்த வச்சதே நீங்கள்தானே. அரசு ஊழியர்களுக்கு கொடுக்கற சம்பளத்தை செலவா பார்க்கிற அரசாங்கம் இருக்கற வரைக்கும். மக்கள் நலத் திட்டங்கள் எல்லாம் நாட்டைஆளும் அரசியல்வாதிகளின் சூட்கேஸ்களையும் பீரோக்களையும் செழுமை யாக்குமே தவிர ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒருபோதும் ஏற்றத்தை கொடுக்காது.

அரசு ஊழியர்கள் போராடுகிறார்கள். ஏன் போராடுகிறார்கள்? ஏதோ அவங்களுக்கு மட்டும் அதிக சம்பளம் கேட்டு போராட அவர்கள் என்ன இதயமற்றவர்களா? அரசு ஊழியர்கள் அரசு ஒப்புக் கொண்ட ஊதியத்தை கேட்டுத்தான் போராடு கிறார்கள். சம்பளக்கமிஷன் பரிந்துரைகளில்

பரிந்துரைக்கப்பட்ட ஊதியத்தை கேட்டுத்தான் போராடுகிறார்கள். கமிஷன் போட்டு ஒரு சம்பளத்தை நிர்ணயித்த பின்னர் அந்த சம்பளத்துலயும் சொற்ப அளவில்தான் தருவேன் என்று அடம்பிடித்தால் அரசு ஊழியர்கள் போராடாமல் என்ன செய்வார்கள்? ஊழல் செய்யாமல் ஊர்பணத்தை கொள்ளையடிக்காமல் காண்டிராக்ட்டுகளில் கமிஷன் பெறாமல் தான் வாங்கும் சம்பளத்தை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்தும் அரசு ஊழியர்கள் தங்களுக்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டதாக தரவேண்டிய ஊதியத்தை கேட்பது அதர்மமாம்? அல்லது அப்படி போராடுபவர்களை எதிர்கட்சித் தலைவர் தூண்டி விட்டு போராட்டம் நடத்துவதாக கொச்சைப் படுத்துவது நியாயமாம்?

அமைச்சர் ராஜேந்திரபாலாஜி அரசு ஊழியர்கள் மீது சுமத்தியிருக்கும் இன்னொரு குற்றச்சாட்டு அரசு ஊழியர்கள் அனைவரும் திமுக கட்சிக்கு ஆதரவாக செயல்படுபவர்களாம். தேர்தல் சமயத்தில் திமுக கள்ள ஓட்டு போடுவதற்கும் வாக்குச்சீட்டு இயந்திரங்களில் திமுகவுக்கு சாதகமாக மாற்றங்கள் செய்வதற்கும் உதவியாக இருப்பவர்களாம். என்ன ஒரு கண்டுபிடிப்பு இந்த அமைச்சருடையது. அப்படி உண்மையில் திமுகவிற்கு விசவாசமாக செயல்பட்டிருந்தால் கடந்த 40 ஆண்டுகளில் அதிமுக ஒருமுறைகூட வென்றிருக்கக் கூடாது. சென்ற பாராளுமன்றத் தேர்தலில் அரசு ஊழியர்கள் வேண்டாம் என்று கூறித்தான் செலக்டிவாக தேர்தல் அதிகாரிகளை நியமித்தார்கள். அப்படியும் அதிமுகவால் ஒரு தொகுதியை தவிர முடிய வில்லையே ஏன்? என்பதை அவர்தான் விளங்கிக் கொள்ள வேண்டும். வரலாறுகளை புரட்டிப் பாருங்கள் அமைச்சரே உங்கள் காலத்தில் மட்டுமல்ல, ஊதிய உயர்வு கேட்டு திமுக ஆட்சிக் காலத்திலும் நாங்கள் போராடியிருக்கிறோம். சிறை சென்றிருக்கிறோம். கருணாநிதிக்காகவோ ஜெயலலிதாவுக்காகவோ நாங்கள் எங்கள் போராட்டங்களை நிறுத்தியது கிடையாது. எங்கள் உரிமைக்கு பங்கம் வரும் சமயங்களில் ஆள்பவர்கள் யார் என்பதைப்பற்றி எங்களுக்கு கவலையில்லை என்பது தான் இதுவரை வரலாறு. அது எடப்பாடி அரசுக்கும் பொருந்தும். ஆனால் ஒன்று எதிர் கட்சிகளாக இருக்கும் அரசியல் கட்சியினருக்கு மட்டுமே எங்கள் கோரிக்கைகளில் உள்ள நியாயங்கள் புரிகிறது. கவலைப்படாதீர்கள், வரும் தேர்தலுக்குப் பிறகு எங்கள் நியாயங்களுக்காக நீங்கள் நிச்சயம் பரிந்து பேசுவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது எங்களுக்கு.

- **தோழன்**

# 2020 ஜனவரி 8-ல் அகில இந்திய வேலை நிறுத்தம்

*சிஐடியு, எல்பிஎப் உள்ளிட்ட 10 அகில இந்திய மத்திய தொழிற் சங்கங்கள் இணைந்து 2019 செப்டம்பர் 30ஆம் தேதி திறந்தவெளி மாநாடு டில்லியில் நடத்தியது. 2020 ஜனவரி 8ஆம் தேதி தேசம் தழுவிய வேலை நிறுத்தத்தை நடத்துவது என்று மாநாடு முடிவு செய்துள்ளது. பத்து அகில இந்திய தொழிற் சங்கங்களோடு வங்கி, இன்சூரன்ஸ், பாதுகாப்பு தளவாட தொழிற்சாலை, மத்திய மாநில அரசு நிறுவனங்களின் தொழிற் சங்கங்கள் பங்கேற்று மோடி அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து தேசம் தழுவிய அகில இந்திய வேலை நிறுத்தத்தை நடத்துவது என தீர்மானித்துள்ளது.*

*மத்திய அரசாங்கத்தின் தொழிலாளி வர்க்கத்தின் நியாயமான கோரிக்கைகளை நிராகரிப்பது மட்டுமின்றி தொடர்ச்சியான முறையில் தொழிலாளி வர்க்கத்திற்கு போராடிப் பெற்ற உரிமைகளை பெரு முதலாளிகளுக்கு ஆதரவாக பறிக்கவும் செய்கிறது. பேச்சுவார்த்தை நீர்த்துப் போகச் செய்யப்படுகின்றன. தொழிலாளர் சட்டங்களை முதலாளிகளுக்கு ஆதரவாக திருத்தம் செய்யப்படுகிறது. அதோடு மட்டுமல்ல ஒரே நாடு, ஒரே தேசம், ஒரே ரேசன் கார்டு, ஒரே தளபதி, ஒரே தேர்தல் என்ற முழக்கத்தை முன்வைத்து மத்திய பாஜக அரசு இந்திய தேசத்தின் ஒட்டுமொத்த மக்களை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்லக்கூடிய வேலையை செய்து கொண்டிருக்கிறது.*

*இந்த தேசம் காக்கும் 2020 ஜனவரி 8 அன்று நடைபெறும் வேலை நிறுத்தத்தில் நமது சங்கமும் பங்கேற்று வெற்றி பெறச் செய்ய வேண்டுமென அகில இந்திய மத்திய தொழிற் சங்கங்கள் அறைகூவல் விடுத்துள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.*

- **ஏ.எஸ்.**

# நன்னடத்தை விதி என்றால் அது அரசு ஊழியர்களுக்கு மட்டும்தான் சொந்தம்!

அரசு ஊழியர்களுக்கு மட்டும்தான் அரசு நடத்தை விதிகள். பொது ஊழியர்களுக்கு அதாவது எம்.எல்.ஏ. அமைச்சர்கள் முதல்வர் உள்ளிட்டோருக்கு அது பொருந்தாது. அதேபோல் குற்ற நடைமுறைகளும் அரசு ஊழியர்களுக்கு மிகக்கடுமையானவை. ஆனால் அரசை நடத்துபவர்களுக்கு சேச்சே, அது கொஞ்சம் கூட கிடையாது. அவர்கள் ஊழல் செய்வார்கள், ஊழல் புகார்களில் கைதாகி இருப்பார்கள், ஊழல் வழக்குகள் கூட நடந்து கொண்டிருக்கும். இருந்தாலும் அவர்கள் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் வெளிநாடுகளுக்கு சென்று வருவார்கள். ஆனால் அரசு ஊழியருக்கு அப்படியல்ல, ஒரு அரசு ஊழியர் வெளிநாடு செல்ல வேண்டும் என்றால் சாதாரணமாக நினைத்த மாத்திரத்தில் சென்றுவிட முடியாது. எதற்காக வெளி நாடு செல்கிறார்? எந்த நாடு செல்கிறார்? எத்தனை நாள் அங்கே தங்கியிருக்கிறார்? என்றைக்கு தாயகம் திரும்புகிறார்? எந்த தேதியில் பணியில் சேர்கிறார்? போன்ற விவரங்களை கண்டிப்பாக துறைத்தலைமையிடம் தரவேண்டும். மேலும் அவர் வெளிநாடு செல்ல சில கட்டுப்பாடுகளும் உள்ளன. அவர் மீது துறைசார்ந்த விசாரணைகளோ, கிரிமினல் வழக்குகளோ இருக்கக்கூடாது, இவையெல்லாம் சரியாக இருந்தால் அவர் வெளிநாடு செல்ல தடையின்மை சான்று சம்பந்தப்பட்ட துறை மேலதிகாரி வழங்குவார்.

ஏன் இத்தனை கெடுபிடிகள் அரசு ஊழியர்களுக்கு மட்டும் என்று தெரியவில்லை. 9000 கோடி ரூபாய் கடன் வைத்துவிட்டு விஜய் மல்லய்யாவால் சர்வசாதாரணமாக வெளிநாடு போய்விட முடிகிறது. ஊழல் குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் வெளிநாடு போய்வர முடிகிறது. நீரவ் மோடி போன்ற மோசடிப் பேர்வழிகள்கூட இந்தியாவை விட்டு எளிதாக போய் விடமுடிகிறது. கிரிக்கெட் சூதாட்ட தரகர் லலித்மோடி கூட வெளிநாடு போய் செட்டில் ஆகிவிட முடிகிறது. ஆனால் ஒரு அரசு ஊழியர் மட்டும் வெளிநாடு போய்வர ஆயிரத்தெட்டு நடைமுறைகள் இந்நாட்டில் வைக்கப்பட்டுள்ளன.

நமக்கு நேர்ந்த அனுபவம்தான் இந்தக் கட்டுரையை எழுத வைத்தது. நமது மாநிலத் தலைவர் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தில் செயலாளராக இருப்பதால் நவம்பர் மாதம் 16 மற்றும் 17 தேதிகளில் சைப்பிரஸ் நாட்டில் உள்ள லார்கானா நகரில் உலகத் தொழிலாளர் மாநாட்டில் அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளத்தின் சார்பில் கலந்து கொள்ளக்கூடிய நான்குபேரில் ஒரு நபராக தேர்வு செய்யப்பட்டிருந்தார். அதற்காக தடையின்மை சான்றை கோரி 1.10.2019ஆம் தேதி அவர் பணிபுரியும் சமூகநலத்துறை அலுவலகத்தில் கொடுத்திருந்தார். ஆனால் அந்த மனுவைக் கொடுத்து 15 நாட்களுக்கு மேலாகியும் அலுவலகத்திலிருந்து எந்தவித பதிலும் கிடைக்கப்பெறாத நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தை அணுக வேண்டியிருந்தது. அரசுத்தரப்புக்கு அறிவிப்பு அனுப்பி அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி அவர் மீது இரண்டு குற்றவியல் வழக்குகள் நிலவையில் இருப்பதாகவும் மேலும் 17(பி) குற்றச்சாட்டின் பேரில் துறை நடவடிக்கையும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. தலைவர் மீதுள்ள இரண்டு கிரிமினல் வழக்குகளில் ஒன்று போராட்டத்தில் கலந்து கொண்டதற்காகவும் இன்னொன்று சாலை மறியல் போராட்டத்தின்போது காவல்துறை அதிகாரியை அவர் தன் பொதுப்பணியை செய்ய விடாமல் தடுத்ததாகவும் போடப்பட்டிருந்தன. கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் 17(பி) சார்ஜ் மெமோ வழங்கப்பட்டிருந்தது. இதை நீதிபதியிடம் எடுத்துச் சொன்னபோது அவர் அரசுத் தரப்பிடம் "அரசு வழக்குரைஞரே, இதெல்லாம் பெரிய கேஸா? ஏதோ கொலைக் குற்றம் பண்ணிட்ட மாதிரியில்ல ஆட்சேபணை தெரிவிக்கிறீங்க?. ஏற்கெனவே இதுபோன்ற மனுக்கள் அனுமதிக்கப் பட்டுள்ளன. இதுக்கு நிறைய முன் தீர்ப்புகளும் உள்ளன'' என்று கூறி மனுவை அனுமதித்து 6.11.2019ம் தேதிக்குள் தடையின்மைச் சான்றிதழ் வழங்க உத்தரவிட்டார்.

ஆனால் அரசுத்தரப்பிலோ இந்த வழக்கை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டது. இதற்குள் விசாவுக்கான காலம் நெருங்கி விட்டதால் குறித்த நேரத்தில் தடையின்மை சான்று கிடைக்குமா என்ற சந்தேகம் இருந்தது. இருப்பினும் ஒருவேளை சைப்ரஸ் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாமல் போனாலும் தடையின்மை சான்றைப் பெற உத்தரவைப் பெற்றே ஆக வேண்டும் என்ற உணர்வு எழுந்தது. மேல் முறையீட்டில் அரசுத்தரப்பில் கடுமையான வாதம்

வைக்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் அரசுத்தரப்பு வழக்குரைஞர் சொன்ன வாதத்தை ஏற்றுக்கொண்ட தலைமை நீதிபதி அரசுத் தரப்பில் அவர் வெளிநாடு செல்லக்கூடாது என்பதற்கு சில நிர்வாகக் காரணங்கள் இருப்பதாக கூறுகிறார்கள் அதை மறுதலிக்க முடியாது என்றார். ஆனால் நமது வழக்குரைஞர் தோழர் என்.ஜி.ஆர்.பிரசாத் அவர்கள் தன்னுடைய ஆணித்தரமான வாதத்தின் மூலம் நீதிமன்றத்தில் கருத்துக்களை எடுத்து அடுக்கினார். பல்வேறு வழக்குகளில் நீதிமன்றங்கள் தடையின்மை சான்று வழங்க அரசுகளை உத்தரவிட்டதையும் எடுத்துக்கூறி வாதம் செய்தார்.

ஒரு தொழிற்சங்க நிர்வாகி தன்னுடைய தனிப்பட்ட விஷயத்துக்காக வெளிநாடு செல்லவில்லை. அவர் சைப்ரஸ் நாட்டில் நடக்க உள்ள உலக தொழிலாளர் மாநாட்டில் கலந்து கொள்ளத்தான் செல்கிறார். அவர் மீது இருக்கும் குற்றச்சாட்டுகள் கொலை முயற்சியோ, கொள்ளை முயற்சியோ, நிர்வாகப் பணத்தை ஊழல் செய்துவிட்டதோ அல்ல ஒரு தொழிற்சங்கவாதி என்ற முறையில் போராட்டத்தில் கலந்து கொண்டு தடையை மீறி சென்றதற்காகவும் சாலை மறியல் செய்ததற்காகவும்தான் உள்ளதே தவிர அவை குற்றநோக்குடன் குற்றச் செயல்கள் செய்த வழக்குகள் அல்ல. இந்த இரண்டு வழக்குகளையும் குற்றவழக்குகளாக கருதுவதே அபத்தமானது. இவற்றில், ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவர் அவர்கள், காவல்துறை அதிகாரி அவருடைய பொதுப்பணியை செய்யாமல் எதிர்மனுதாரர் தடுத்ததாக கூறப்பட்டுள்ளதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று கூறி எதிர்மனுதாரரை ரிமாண்ட் செய்ய மறுத்துள்ள நிலையில் அதை ஒரு கிரிமினல் வழக்காக அரசுத் தரப்பில் காட்டுவது வேடிக்கையாக உள்ளது'' என்று வாதிட்டார். மேலும் அரசுத்தரப்பில் குற்ற வழக்குகளும் துறை நடவடிக்கைகளும் இருந்தால் வெளிநாடு போக தடையின்மைச் சான்று வழங்கக்கூடாது என்ற சர்குலர் சட்டத்திற்கு முரணானது. குற்றச்சாட்டுகள் நிலுவையில் இருந்தாலும் குற்றத்தின் தன்மையை பரிசீலித்து சம்பந்தப்பட்ட நபர் வெளிநாடு சென்று வருவதற்கான காரணத்தை ஆராய்ந்து அவரை வெளிநாடு சென்றுவர அனுமதிக்கலாம் என பல தீர்ப்புரைகளில் கூறப்பட்டுள்ளதை இந்த சுற்றறிக்கையில் அரசுத்தரப்பு கவனத்தில் கொள்ளவில்லை என்பது துரதிருஷ்டவசமானது என்று வாதுரைத்தார்.

மூத்த வழக்குரைஞரின் வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அரசாங்கத்தில் வெளிநாடு செல்ல தடை இருந்தாலும் நீதிமன்றம் மனுதாரரை வெளிநாடு சென்றுவர அனுமதிக்கிறது என்றும், அரசாங்கம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை சட்டப்படியானதுதானா என்பது குறித்து விசாரித்து முடிவு செய்வதற்காக வழக்கை டிசம்பர் 2ம்தேதி ஒத்தி வைத்து உத்தரவிட்டது. உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய நாட்களிலிருந்து விசா பெற குறித்த காலஅவகாசம் கிடைக்காததால் தலைவர் அந்த உலக தொழிலாளர் மாநாட்டிற்கு செல்ல முடியாமல் போய்விட்டது வருத்தமே என்றாலும் இந்த அதிகார வர்க்க அரசாங்கத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் தடையின்மை சான்று வழங்க உத்தரவு பெற்றதும் அரசுத் தரப்பில் போடப்பட்டிருக்கும் சுற்றறிக்கை சட்டப்படி செல்லத்தக்கதா என்ற ஆய்வுக்கு உட்படுத்தியிருப்பதும் இந்த வழக்கில் நாம் பெற்றிருக்கும் வெற்றிகளாகும். இந்த நிகழ்வு சொல்லும் உண்மை, அரசு ஊழியர்களை சகட்டுமேனிக்கு ஆட்டிப்படைக்க தன்னுடைய முழு அதிகாரத்தையும் அரசு நிர்வாகம் பயன்படுத்தி வருகிறது என்பதும் சட்டத்திற்கு புறம்பாக அதிகார வர்க்கம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் போராட்டங்கள் மூலமாகவோ நீதிமன்றத்தின் வாயிலாகவோ எதிர்கொண்டு முறியடிக்கும் என்கிற வரலாறு தொடர்ந்து கொண்டிருக்கும் என்பதுதான். அதிகார வர்க்கத்திற்கும், அமைச்சர்களுக்கும், ஆள்பவர் களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் எந்த விதிகளும் கிடையாது. நன்னடத்தை விதி என்றால் அது அரசு ஊழியர்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்பது கல்வெட்டில் பொறித்த எழுத்துக்கள்.

- தெ.வாசுகி

## வாசகர் கடிதம்

*நவம்பர் மாத இதழை படித்தேன். முன் அட்டைப் படம் 5 முனைகளிலிருந்து மக்கள் சந்திப்பு இயக்கம், கோட்டை முற்றுகை போராட்டம் சிறப்பாக இருந்தது. அச்சே தின் போயே போச் தலையங்கம், மாத்தி யோசி கட்டுரை, தேர்தல் சீர்திருத்தம் அவசியம் ஏன்? தமிழ்நாடு அமைப்பு தினமும் தமிழ் வளர்ச்சியும், சந்திப்புகளும் முறையீடுகளும் போன்ற அனைத்து கட்டுரைகளும் சிறப்பாக இருந்தது. கருவூல கணக்குத் துறை முறையீடு மற்றும் தஞ்சை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும்எழுச்சியுடன் இருந்தது.*

- ***ரா.தட்சிணாமூர்த்தி***, *கடலூர்*

# மார்க்சின் அனைத்துமாய் ஜென்னி

காரல் மார்க்ஸ் மனிதகுல விடுதலைக்கான தத்துவத்தைப் படைத்தது வறட்டுத் தனமானதன்று. அது அறிவியல்பூர்வமானது. அழகியலுடனான இலக்கியப்பூர்வமானது. இதற்கு இரு கண்களாக ஜென்னியும் எங்கெல்ஸும் அமைந்தனர் எனின் மிகையன்று.

உயிருக்குயிராய் நேசித்த காதலியும் மனைவியுமான ஜென்னியிடம் அளவுகடந்த அன்பு செலுத்தினார். ஜென்னி அவருடைய மனைவியாக மட்டுமல்லாமல் நெருங்கிய நண்பராகவும் ஆலோசகராகவும் அவருடைய நூல்களின் விமர்சகராகவும் இருந்தார். காரல் மார்க்ஸ் ஜென்னியின் இலக்கியத் திறனை வியந்து போற்றியுள்ளார். ஜென்னி கடிதம் எழுதும் கலையில் ஒப்பற்ற திறமை உடையவர் என்று கருதினார். அது உண்மை யென்பதை ஜென்னியின் கடித இலக்கியங்கள் மெய்ப்பிக்கின்றன.

ஒருமுறை மார்க்ஸின் எழுத்து நடையை விமர்சித்து ஜென்னி எழுதிய கடிதம் இன்றும் பாதுகாக்கப்பட்டுள்ளது.அதில் அவர் மார்க்ஸுக்கு அறிவுரை கூறுகிறார்..

"மிகவும் அதிகமான வெறுப்புடனும் எரிச்சலுடனும் எழுதாதீர்கள். உங்களுடைய மற்ற கட்டுரைகள் எவ்வளவு அதிகமான விளைவை ஏற்படுத்தின என்பது உங்களுக்குத் தெரியும். எதார்த்தமான முறையில் நயத் துடனும் நகைச்சுவையுடனும் இலேசாகவும் எழுதுங்கள்.அன்பே!உங்கள் பேனாவைக் காகிதத்தின் மீது ஓடவிடுங்கள்,சில சமயங் களில் தடுக்கி விழுந்துவிடுமானால்,அதோடு சேர்ந்து வாக்கியமும் சிதைவடைந்தாலும் கவலை வேண்டாம்.உங்கள் சிந்தனைகள் பழைய காலத்துப் படைவீரர்களைப் போல அதிகமான உறுதியுடனும் துணிவுடனும் விறைப்பாக நிற்கின்றன..."



குடும்பத் துன்பங்களின் சுமைகள் எப்படி இருந்த போதிலும் மார்க்ஸின் அறிவியல் மற்றும் அரசியல் பணியில் ஜென்னி சோர்வடையாமல் உதவி செய்தார். பல்லாண்டுகாலம் ஜென்னியே மார்க்ஸின் செயலாளர் பொறுப்பில் பணியாற்றினார். அவருடைய நூல்களைப் பிரதியெடுத்தார்.கட்சிப் பணிகளில் மார்க்ஸின் செய்தி அறிவிப்பாளராக இருந்தார். ஜென்னி தன்னைக் கட்சியின் ஊழியர் என்று பெருமையாகக் கருதினார்.

மார்க்ஸின் குடும்பம் வறுமையில் தத்தளித்தது. எனினும் அரசியல் அகதிகளுக்கு அவர் குடும்பத்தில் இடமும் உணவும் ஆறுதலும் தவறாமல் கிடைக்கும். மார்க்ஸைக் காட்டிலும் ஜென்னி இவ்விசயத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார். அதை வில்ஹெல்ம் லீப்ட்னெஹ்ட் இவ்வாறு கூறியுள்ளார்... "எனக்குத் தாயாக, நண்பராக, துணைவராக, ஆலோசகராக இருந்தார்கள்; பெண்ணைப் பற்றிய இலட்சிய வடிவமாக இருந்தார்கள்...."

மிக அடக்கமான அரசியல்வாதிகள்கூட ஜென்னியைப் பற்றிப் பேசுகின்றபொழுது கவிஞர்களாக மாறினார்கள். தன் கணவர் சம்மந்தப்பட்ட ஒவ்வொன்றுமே மற்றவர் களைக் காட்டிலும் ஜென்னியைத்தான் அதிகமாகப் பாதித்தது. ஜெர்மனியின் பிற்போக்குப் பத்திரிகைகள் 1848 ஆம் ஆண்டுப் புரட்சிக்காரர்களைப் பற்றி அவதூறு

செய்தபொழுது,விஷத்தில் தோய்க்கப்பட்ட அம்புகள் மார்க்ஸைக் குறி பார்த்துத் தொடுக்கப்பட்ட பொழுது ஜென்னியே மிகவும் பாதிக்கப்பட்டார்.நோயில் விழுந்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க மூலதனத்தின் முதல் தொகுதி வெளியிடப்பட்ட பிறகு சகாப்தம் நிறைந்த இந்நூலை ஜெர்மானியர்கள் முற்றிலும் புறக்கணித்துவிட்டார்களே என்று ஜென்னி மிகவும் வருந்தினார்.

இருபதாம் நூற்றாண்டில் மார்க்சியம் வென்று உலகின் மூன்றிலொரு பகுதி சோஷலிச பூமியாகத் திகழ்ந்தது வரலாறு.

மனிதகுல விடுதலைக்கு மார்க்சியமே தீர்வு என வாடிகன் போப் ஜான்பால் கூறியது நினைவுகூறத் தக்கது.இன்று உலகப் புகழ் வாய்ந்த தத்துவவாதியாக மார்க்ஸ் மிளிர்கிறார். ஆனால் அவர் உயிருடன் இருந்த கால கட்டங்களில் சந்தித்தது வறுமையும் வேதனையும்தான்.

சுருங்கச் சொல்வதெனில் குழந்தை பிறக்கும்போது தொட்டில் வாங்கவும் பணமில்லை. குழந்தை இறக்கும்போது சவப்பெட்டி வாங்கவும் பணமில்லை. இந்நிலையில் பெரும் செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த ஜென்னி காரல் மார்க்ஸின் மீது கொண்டிருந்த அன்பு ஒன்றுக்காகவே காலம் முழுவதும் வறுமையை அனுபவித்தார். ஒட்டுமொத்த மனிதகுல வறுமையகற்ற மார்க்கம் காணும் பணியில் இருவரும் சேர்ந்தே பயணித்து வெற்றி கண்டனர்.

மனித குலம் காதலைப் பற்றி பல கதைகளையும் காவியங்களையும் படைத் திருக்கிறது. அவற்றுள் மார்க்ஸ் ஜென்னி காதல் கதை உண்மையானது, மேன்மையானது.

1881ஆம் ஆண்டின் இறுதியில் ஜென்னி மரணமடைந்தபொழுது எங்கெல்ஸ் "இனி மூரும்(மார்க்ஸும்)இறந்துவிட்டார்" என்று கூறினார் எங்கெல்ஸ். இதைக் கேட்ட மற்றவர்கள் திகைப்படைந்தனர். மார்க்ஸும் ஜென்னியும் ஒருவர் இல்லாமல் மற்றொருவர் மெய்யாகவே வாழமுடியாது. மார்க்ஸ் இனிமேல் உயிர் தரிக்கமாட்டார் என்பதை எங்கெல்ஸ் நன்றாக அறிந்திருந்தார். அவர் கூறியபடியே நடந்தது.

**(ஜென்னி நினைவு நாள்... டிசம்பர் 2)**

**- பெரணமல்லூர் சேகரன்**

---

## தெரிந்து கொள்வோம்

• உலகின் மிக மோசமான வறுமை நிலவும் நாடுகளில் மோடி பாஜக ஆளும் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. உலகின் அதீத வறுமை நிறைந்த முதல் நாடு நைஜீரியா 15.7% 2. காங்கோ 10% 3. இந்தியா 8% 4. எத்தியோப்பியா 4.8% 5. தான்சானியா 3% 6. வங்கம் 2.3% இந்தோனேசியா 2.1% ஏமன் 4.6%, பிரேசில் 1.1% சீனா 0.9%, அமெரிக்கா 0.3% மெக்சிகோ 0.35%

• இந்தியாவின் 16 பெரு முதலாளிகளின் சொத்து பல லட்சம் கோடி ரூபாய். 137 கோடி மக்களில் 8% பேர் வறுமை. இந்த அவமானத்தால் இந்தியா வல்லரசாம்.

• இந்தியாவில் 10,926 பேருக்கு ஒரு அரசு அலோபதி மருத்துவர் (மத்திய சுகாதார புலனாய்வுப் பிரிவு 2019 அறிக்கை) உலக சுகாதார மையம் கருத்துப்படி ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவர் இருக்க வேண்டும்.

• உலகில் நிலத்தடி நீர் பயன்படுத்தும் நாடுகளில் இந்தியா முதலிடம்.

• 80 கோடி மக்கள் நிலத்தடி நீரை குடிநீராக பயன்படுத்துகிறார்கள்.

• இந்தியாவில் அதிகம் நிலத்தடி நீர் உறிஞ்சும் மாநிலங்களில் முதலிடம் தமிழகம்.

• உலகில் தரமான நீர் கிடைக்கும் 122 நாடுகளில் 133வது இடம் இந்தியா.

• உலகம் முழுவதும் 9 ஆயிரம் கோடி தண்ணீர் விற்பனை. இந்தியாவில் 800 கோடிக்கு தண்ணீர் வியாபாரத்தில் லாபம்.

- **ஏ.எஸ்.**

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கம்



சங்கத்தின் மாநில பொதுக்குழு திருச்சியில் 23.11.2019 அன்று மாநிலத் தலைவர் அ.சேகர் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு "அண்மைக்கால போராட்ட படிப்பினைகளும், எதிர்கால சவால்களும்" என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார்.

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கம்

சங்கத்தின் திருவாரூர் மாவட்ட பேரவை மாவட்ட தலைவர் பி.மகாலிங்கம் தலைமையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் 24.11.2019 கொடியேற்றத்துடன் தொடங்கியது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியினை சம்மேளன தேசிய செயற்குழு உறுப்பினர் எம்.சௌந்தரராஜனும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக கொடியினை சங்கத்தின் மாவட்ட தலைவர் எம்.ராஜமாணிக்கமும் நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்க கொடியினை சங்கத்தின் மாநில துணைத் தலைவர் ராஜமாணிக்கமும் ஏற்றி வைத்தனர்.

## தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம்

சத்துணவு ஊழியர்களுக்கு வரையறுக்கப் பட்ட காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும், விலைவாசி உயரவுக்கேற்ப உணவூட்டு செலவு மானியத்தை ரூ. 5 ஆக உயர்த்தி மாணவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகள் வலியுறுத்தி நவம்பர் 26 அன்று தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் சார்பில் மாநிலம் முழுவதும் மறியல் போராட்டம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வடசென்னை மாவட்ட செயலாளர் அந்தோணி சாமி துவக்கிவைத்தார். சத்துணவு ஊழியர் சங்க சென்னை மாவட்டநிர்வாகிகள் கேசவன், சுபந்தி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

திருவாரூரில் நடைபெற்ற பேரணியை அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் வி.சோமசுந்தரம் துவக்கி வைத்தார்.

## தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கம்

சங்கத்தின் மாநில செயற்குழு சனிக்கிழமையன்று 23.11.2019 அன்று சென்னை பெரியமேடு சால்வேசன் ஆர்மி அரங்கில் மாநிலத் தலைவர் மு. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இதில் காலியாக உள்ள 700க்கும் மேற்பட்ட பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும், மருந்தியல் அல்லாத நோயாளர் நலச்சங்க பணியிலிருந்து மருந்தாளுநர்கள் விடுவித்திட வேண்டும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தாளுநர் பணி நேரம் 94 என ஏற்கனவே வழங்கப்பட்ட அரசாணையை ரத்து செய்ததை கைவிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ❑

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com